உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு.

துணர் ௰உ. { தாது, மார்கழி } மலர் சு

க. நெடுந்தொகைக் குறும்பொருள் 305
வித்துவான். சு. மாணிக்கவாசகமுதலியாரவர்கள்

உ. கல்லாட நூலாராய்ச்சி 316
திரு. E. R. நரசிம்மஐயங்கார் அவர்கள் B.,A. B.L.,

ங. பழைய பாடற்றிரட்டு 324
திரு. L. உலகநாதபிள்ளை அவர்கள்.

ச. வள்ளல் அதியமான் நெடுமானஞ்சி 333
திரு. சிவ. குப்புசாமிப்பிள்ளையவர்கள்

ரு. மதிப்புரை 343

சு. பிழை திருத்தம் 344

எ. நன்கொடைகள் 345
பொழிற்றொண்டர்

செந்தமிழ்ப்புரவலர்,

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பொழிற்றொண்டர்.

தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகம், கரந்தை.

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௰உ	தாது, மார்கழி	மலர் கூ

உ

நெடுந்தொகைக் குறும்பொருள்

திரு. வித்துவான். மூத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், போர்டு உயர்பள்ளி, ஆரணி.

(முற்றொடர்ச்சி துணர் 12, மலர் 8, பக்கம் 286)

பாட்டு. கக. பாலை. ஔவையார்.

தலை மகன் பொருள்வயிற் பிரிந்தவிடத்து ஆற்றாளாய தலைமகள் வேறு பாடுகண்டு ஆற்றாளாய தோழிக்குத் தலைமகள் ஆற்றுவலென்பது படச் சொல்லியது.

வான மூர்ந்த வயங்கொளி மண்டில
நெருப்பெனச் சிவந்த வுருப்பவி ரங்காட்
டிலையில மலர்ந்த முகையி லிலவங்
கலிகொ ளாய மலிபுதொகு பெடுத்த

வஞ்சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றிக்
கயந்துக ளாகிய பயந்தபு கான
மெம்மொடு கழிந்தன ராயிற் கம்மென
வம்புவிரித் தன்ன பொங்குமணற் கான்யாற்றுப்
படுசினை தாழ்ந்த பயிலிணர் எக்கர்
மெய்புகு வன்ன கைகவர் முயக்க
மவரும் பெறுகுவர் மன்னே நயவர
நீர்வார் நிகர்மலர் கடுப்ப வோமறந்
தறுகுள நிறைக்குந போலவல் கலு
மழுதன் மேவல வாகிப்
பழிதீர் கண்ணும் படுகுவ மன்னே.

வானம்ஊர்ந்த வயங்கு ஒளிமண்டிலம்-வானத்திற்போய விளங்குகின்ற ஒளியையுடைய ஞாயிறு, நெருப்பு என சிவந்த உருப்பு அவிர் அம்காடு=தீயைப்போலச் சினந்த வெப்பம் விளங்கும் அழகிய காட்டில், இலைஇல மலர்ந்த முகைஇல் இலவம்=இலைகள் இல்லாதனவாய்ப் பூத்த அரும்புகளில்லாத இலவ மரம், கலிகொள் ஆயம் மலிபு தொகுபு எடுத்த அம் நெடு சுடர்கொடி பொற்ப தோன்றி=விழவின் ஆரவாரத்தைத் தம்மிடத்தே கொண்ட மகளிர் திரள் விருப்பம் மிக்கு ஒருங்கு சேர்ந்து தூக்கிய அழகிய நெடிய விளக்கின் ஒழுங்கினை யொக்கத் தோன்ற, கயம்துகள் ஆகிய பயம் தபு கானம்=அறுநீர்ச்சுனை (பலவகையான)துகள் (பட்டுக்கலக்கம்) ஆகிய பயனற்ற சுரத்தில், எம்மொடு கழிந்தனராயின்=எம்மை உடன் கொண்டு சென்றனராயின், வம்புவிரித்த அன்னபொங்கு மணல்கான்யாறு படுசினை தாழ்ந்த பயில் இணர் எக்கர்=கச்சு விரித்தாற் போன்ற மிக்க மணலையுடைய காட்டாற்றிற் பெரிய கொம்புகள் தாழ்ந்துள்ள பெருகிய பூங்கொத்துகளை யுடைய மணற் குன்றிடத்து, மெய்புகுவு அன்னகைகவர் முயக்கம் நயவர அவரும் கம்மென மன் பெறுகுவர்= ஒருவருடலி லொருவருடல் புக்காற் போன்ற கைவிரும்புகின்ற முயக்கத்தை விருப்பம் வர அவரும் விரையப் பெரிதும் பெறுவார், நீர்வார் நிகர் மலர் கடுப்ப அறுகுளம் நிறைக்குநபோல அல்கலும் ஓமறந்து அழுதல் மேவலஆகி பழி

நீர்கண்ணும் படுகுவமன் = நீர் ஒழுகும் ஒளியையுடைய பூவை யொப்ப நீரற்ற குளத்தை நிறைப்பவை போல நாடோறும் (மெலிவான்) நீங்குதலை மறந்து அழுதலைப் பொருந்தாவாய்க் குற்றந் தீர்ந்தகண்களும் இமையோடிமை படத்துயிலுவனவாம். அது கழிந்தது.

விண்ணிற்சென்ற விளங்குகின்ற ஒளியையுடைய ஞாயிறு தீப்போற் சினந்தமையால் வெப்பம் விளங்கும் அழகிய காட்டின்கண் இலைகளும் அரும்புகளுமில்லாதனவாய் முற்றப் பூத்த இலவமரம் மிக்க விருப்பத்தொடும் விழவின் ஆரவாரத்தொடும் ஒருங்கு சேர்ந்து நெடிய விளக்குக்களை வரிசையாக எடுத்த மகளிர் திரளையொத்துத் தோன்ற அறுநீர்ச்சுனை பலவகைப் பட்டதுகளடைந்து தூர்ந்துபோய பயனற்ற அக்கானத்திடத்து எம்மையும் உடன்கொண்டு கழிந்தாராயின், கச்சு விரித்தாற் போன்ற மிக்க மணல் பரந்த காட்டாற்றிற் பெரிய கொம்புகள் தாழ்ந்துள்ள பெருகிய பூங்கொத்துக்களையுடைய மணற்குன்றின்மேல் உடலுள் உடல் புக்கது போன்றதை விரும்புகின்ற முயக்கத்தை விருப்பம் வர அவரும் பெறுவர். நீர் ஒழுகும் ஒளியை யுடைய பூவையொக்க நீரற்ற குளத்தை நிறைப்பவை போல (மெலிவான்) இடைவிடாது அழுதலைப் பொருந்தாதனவாய்க் குற்றந் தீர்ந்த (என்) கண்களும் இமை யோடிமை படத் துயிலுவனவாகும். அவர் அதுசெய்கின்றிலர் என்பது இச்செய்யுளிற் போந்தபொருளாம்.

ஊர்ந்தமண்டிலம் சிவந்தகாடு. அவிர்காடு. காட்டிலவம். சுடர் நெடுங் கொடிபொற்பத் தோன்றக், கயந்துகளாகிய காடு. ஆயம் மலிபு தொகுபு எடுத்த சுடர்க் கொடி. தோன்றி என்னும் செய்தெனெச்சத்தைத் தோன்ற எனச் செயவெனச்சமாகத் திரிக்க. தோன்றல் இலவத்தின்வினை. துகளாதல் கயத்தின் வினை. 'தோன்றி' எனக்கிடக்கைமுறையிற் கொள்ளின் முடியுமாறின்று. தோன்றத் துகளாகிய கானம், கானம் கழிந்தனராயின் அவரும் முயக்கம் பெறுகுவர். கண்ணும் அழுதல் மேவல வாகிப் படுகுவ. கம்மெனப் பெறுகுவர். நயவரப் பெறுகுவர். மன்பெறுகுவர். சினை தாழ்ந்தஎக்கர், எக்கரிற் பெறுகுவர். வம்பு

விரித்தன்ன மணல். வம்பு விரித்தன்ன பயிலிணரெக்கர் எனலு மாம். மெய்புகுவன்னமுயக்கம். அவரும் பெறுகுவர். கண்ணும் படுகுவ. ஓமறந்தழுதல். கடுப்ப அழுதல். நிறைக்குளம்போலஅழு தல். எம்மொடு கழியாமையின் அல்கலும் அழுதல் மேவியகண், கழிந்தனராயின் அதனை மேவலவாகிப்படுகுவ. காட்டில் சுடரை மலிபு தொகுபு எடுத்த ஆயம்பொற்ப இலவம்இலையின்றி அரும் பறமுற்ற மலர்ந்து தோன்றுதற்கும் கயந்துகளாதற்கும் வயங் கொளி மண்டிலம் நெருப்பெனச் சிவத்தலே ஏதுவாதல் அறிக. படுசினையை வினைத் தொகையாக்கியும் பொருள் கூறலாம். தாழ்ந்த இணர் எனவும், இணர் பயிலெக்கர் எனவும் கூட்டிப் பொருள் கூறலுமாம். நெடுங்கொடி எனக்கிடக்கையே பொருந்து மெனலுமாம்.

மன் இரண்டனுள் முன்னது மிகுதி(கலி94:—16. 107:—9, 21. 137:—11) யையும் பின்னது கழிவையும் உணர்த்தி நின்றன.

இச்செய்யுட்கள் காட்டின் வெப்பமும் இலவத்தின் நிலையும், மகளிர் திரள் கார்த்திகை விளக்கெடுத்தலும், கயந்துகளாதலும், மணலின் தோற்றமும், இணர்பயிலெக்கர் நுகர்ச்சி(கலி. 27:—20)யும், தலைவியின்கண் துயிலாமையும், தலைவியைத் தலைவன்கொண்டு கழியாமையும், அதனால் தலைவற்கு முயக்கமின்மையும், தலைவிக்குக் கயக்கமுண்மையும் கூறியவாறறிக. முயக்க மின்மையாகிய வேறுவால் தலைவியின் கண்கள் துயிலாது நாடோறும் இடைவிடாமல் அழுதலையுற்று, அறுகுள நிறைப் பவைபோல நீர் வார்தலின், அவற்றிற்கு நீர்வார் நிகர் மலரு வமையாயின. தன் தலைவியின் கற்பிற்குவரும் பழியும் தனக்கு வரும் பூசல் தராமையாகிய பழியுந் தீர்ந்தமையால், பழிதீர்கண் என்றார். ‘பழிதீர்முறுவல்’ (தொல். களவு. 20)

தானுந் தலைவனும் முயக்க முற்றுக் கயக்கமற்றிருத்தற்கு வழியுணர்ந்து கூறுதலின் ஆற்றுதல் பெற்றாம்.

1: ஊர்தல்=செல்லுதல். கலி. 39:—8. வானூர்மதியம். நாலடி. 125. சிலப். 6:—37. சிந். 286. ‘மஞ்ஞை யூர்ந்து’.

"ஊர்தல் ஈண்டுப் போதன் மேற்று; 'வானூர்மதியம்' போல (உரை). நெடுநல். 161. 'விண்ணூர்பு திரிதரும்' 'ஆகாயத்திடத்தே சென்றுதிரியும்' (உரை) மேமேலேதோன்றுதல். (கலி:—148—5)

2. மண்டிலம்.

தயங்குதிரைப் பெருங்கட லுலகுதொழத் தோன்றி
வயங்குகதிர் விரிந்த வுருகெழு மண்டிலம்'
'நிரைசெல லிவுளி விரைவுடன் கடைஇ
யகலிரு விசும்பிற் பகல்செலக் சென்று
மழுகுசுடர் மண்டிலம் மாமலை மறைய'
'இலங்குசுடர் மண்டிலம் புலந்தலைப் பெய்து
பல்கதிர் மழுகிய கல் சேரமையம்'
'அழல்கான்று திரிதரு மலங்குகதிர் மண்டிலம்'
(அகம். [31]. 263. 363. 367. 381.)

'சேய்விசும் பிவர்ந்தசெழுங் கதிர்மண்டிலம் மாமலைமறைய'
'வயக்குறு மண்டிலம்' (கலி. 25:-1. உரைபார்.) [நற்.67.
'விரிகதிர் மண்டிலம்' (கலி. 71:-1.)
'பல்கதிர் மண்டிலங் கல்சேர்பு மறைய' (குறிஞ்சிப். 216.)
'குணகடல்வரைப்பின் முந்நீர்நாப்பட் பகல்செய் மண்டிலம்' (பெரும்பாண். 441-2)
'மாதிரம், விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டிலம்' (நெடுநல்-72-3)
'விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலன் மண்டிலத்து' (ஷை 161.)
'வீங்குசெலன் மண்டிலம்' (புறம். 8.)
'நளிகதிர் மண்டிலம்' (பெருங். 2-10:—133)
'புதையிரு ளகற்றும் பொங்கொளி மண்டிலம்' (ஷை.11:—81)
'உருப் பவிர் மண்டி லத்து'
'பொன்னிறை சுருங் காமண் டிலம்' (ஷை.4:—164; 177)
மதியைக் குறித்தல் (கலி. 7:—7)

ஞாயற்றின் மண்டிலத்தைக் குறித்தல் (அகம்.378:—14
கலி. 141:—12)

3. வயங்குதல்.

'வானமூழ்கிய வயங்கொளி நெடுஞ்சுடர்க் கதிர்காய்ந்
தெழுந்தகங் கனலி ஞாயிற்றுவைகுறு வனப்பு' (நற். 163)

'வானமூர்ந்த வயங்கொளி மண்டிலம் நெருப்பெனச்சிவந்த வுருப்பவி ரங்காட்டு என்றவழி, வயங்கென்பதூஉம் அவிரென் பதூம் விளக்கங் குறித்து நின்றன' என்பது (தொல். சொல். சூ. 391) தெய்வச்சிலையாருரையாகும்.

4. சிவத்தல்.

'கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள' (தொல். உரி 76)
நெருப்பெனச் சிவந்த வுருப்பவிர் மண்டிலம்' (அகம். 31)
'சினந்தீர் மண்டிலம்' (பெருங். 1. 33:—40)
'பல்வளம் பகர்பூட்டும் பயனிலம் பைதறச்
செல்கதிர் ஞாயிறுசெயிர் சினஞ் சொரிதலிற்
றணிவில் வெங்கோடை' (கலி. 20:—1—3)

5. கலி:—

கலிகொள் சும்மை ஒலிகொள் ஆயம். (மதுரைக். 264)

6. இலவத்தின் செய்தி.

'நிழல்படக் கவின்ற நீளரை யிலவத்
தழலகைந் தன்ன வலங்குசினை யொண்பூ' (அகம். 245.)
'எரியுரு வுறழ விலவ மலர' (கலி. 33:-10.)
'முள்ளரை யிலவத் தொள்ளிணர் வான்பூ
முழங்கழ லசைவளி யெடுப்ப வானத்
துருமுப்படு கனலி னிருநிலத் துறைக்குங்
கவலை யருஞ்சுரம்' (ஐங். 320.)
'இலவ மேறிய கலவ மஞ்ஞை
யெரிபுகு மகளி ரேய்க்கும்' (சிற்றெட்டகம். ஐங். பக். 143.)
'சார, விலையில மலர்ந்த வோங்குநிலை யிலவ
மலையுறு தீயிற் சுரமுதற் றோன்றும்' (ஐங். 338.)

'வானுலந், தருவி யான்ற வுயர்சிமை மருங்கிற்
பெருவிழா விளக்கம் போலப் பலவுடன்
இலையில மலர்ந்த இலவம்' (அகம். 185.)

'அருஞ்சுரக் கவலைய வதர்படு மருங்கின்
நீளரை யிலவத் தாழ்கழி பன்மலர்
விழவுத் தலைக்கொண்ட பழவிறன் மூதூர்
நெய்யுமிழ் சுடரிற் கால்பொரச் சில்கி
வைகுறு மீனிற் றோன்றும்' (அகம். 17.)

'எரிபரந்தன்ன இல(வ)மலர்' (அகம். 133.)

'எரிநிறத் திலவம்' (சிலப். 5:-214.)

'எரிமல ரிலவம்' (மணி. 3:-166. பெருங். 1. 54:-143.)

'ஒள்ளெரி யெழுந்த வூழ்படு கொழுமலர்
முள்ளரை யிலவம்' (பெருங். 1. 53:- 177-8. 56:-214.)

'ஆனேற்றுக் கொடியோன்போ லெதிரிய விலவம்.' (கலி. 26:-5)

,ஊனென மலர்ந்த வேனி லிலவம்' (பெருங். 2. 9:—139)

'ஊன் றகர்த்தனைய போன்று மூடெரி முளைப்ப போன்றுந்
தோன்று பூ விலவத்து' (சிந். 1701)

'கருங்கா லிலவம்' (அகம். 309.)

'நீளரை யிலவத் தலங்குசினை பயந்த
பூளையம் பசுங்காய் புடைவிரிந் தன்ன
வரிப்புற வணில்' (பெரும்பாண். 83-5)

7. கார்த்திகைத் திருவிழா.

மழைகாலீங் கிய மாக விசும்பிற்
குறுமுயன் மறுநிறங் கிளர மதிநிறைந்
தறுமீன் சேரு மகலிரு ணடுநாண்
மறுகு விளக் குறுத்து மாலைதூக்கிப்
பழவிறன் மூதூர்ப் பலருடன் றுவன்றிய
விழவுட னயர வருகதில் லம்ம' (அகம். 141)

'பெரு விழா விளக்கம்' (அகம். 185)

'விழவுத் தலைக் கொண்ட பழவிறன் மூதூர்
நெய்யுமிழ் சுடர்' (அகம். 17.)

'அறுமீன் பயந்த வறஞ்செய் திங்கட்
செல்சுடர் நெடுங் கொடி போலப்
பல்பூங் கோங்க மணிந்த காடே' (நற். 201)
'நலமிகு கார்த்திகை நாளவ ரிட்ட
தலைநாள் விளக்கு' (கார் நாற். 26)
'கார்த்திகைச் சாற்றிற் கழி விளக்கு' (களவழி. 17)
'குன்றிற் கார்த்திகை விளக்கு' (சிந். 256)
'குன்றின் கொழுஞ் சுடர் விளக்கு.' (சூளா. மந் 17)
'வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகிற்
றுளக்கில் கபாலீச் சரத்தான் றொல்கார்த்திகைநாட்
டளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்'
(திருஞான. தேவா. மயிலை 3.)
'வேலின் ஒக்கிய விளக்கு நிலை' (தொ. பொ. 90.)

இது கார்த்திகைத் திங்களிற் கார்த்திகை நாளின் ஏற்றிய விளக்குக் கீழும் மேலும் வலமு மிடமுந் திரிபரந்து சுடர் ஓங்கிக் கொழுந்து விட்டெழுந்ததென்று அறிவோராக்கங் கூறப் படுவதாம்.

8. மெய்புகு வன்ன கைகவர் முயக்கம்.

'பருகு வன்ன காதலொடு திருகி
மெய்புகு வன்ன கைகவர் முயக்கத்
தோருயிர் மாக்கள்' (அகம். 305)
'விளங் கிழைப் பொலிந்த தோள்சேர்
பெய்திய கனைதுயி லேற்றொறுந் திருகி
மெய்புகு வன்ன கைகவர் முயக்கின்மிகுதி' (அகம். 379)
'நம்வயின் மெய்புற விரும்பிய கைகவர்முயக்கினு
மினிய.....................பொருளே' (ஐங். 337)
(முயக்கம், குறுந், 237 கலி. 32. 71. 78.)
'இலங்குவளை நெகிழப் பரந்துபட ரலைப்பயாம்
முயங்குதொறு முயங்குதொறு முயங்க முகந்துகொண்
டடக்குவ மன்னோ தோழி...................
சாரனுடன் சாயன் மார்பே' (அகம். 328)

'சிமையக்குரல சாந் தருந்தி யிருளி
யிமையக் கான நாறுங் கூந்த
னன்னுத லரிவை யின்னுற லாகம்
பருக்கு வன்ன காத லுள்ளமொடு
திருகுபு முயங்கல்.' (அகம். 399.)

9. வம்பு விரித்தல்.

மணிகண் டன்ன மாநிறக் கருவிளை
யொண்பூந் தோன்றியொடு தண்புத லணியப்
பொன்றொடர்ந் தன்ன தகைய நன்மலர்க்
கொன்றை யொள்ளிணர் கோடுதொறுந் தூங்க
வம்புவிரித் தன்ன செம்புலப் புறவு.

வம்பு=கச்சு. 'வம்பு நிறை முடிநர்' (=கச்சுக்களைத் தம் தொழில் முற்றுப்பட முடிவார். மதுரைக். 514. உரை.)

'விண்பொருஞ் சென்னிக் கிளைஇய காந்தட்
டண்கம ழலரி தாஅய் நன்பல
வம்புவிரி களத்திற் கவின்பெறப் பொலிந்தகுன்று'

"உயர்ந்த நிலத்தே நின்று மணக்கின்ற காந்தள் வரையர மகளிரால் கீழ்நிலத்தே பரந்து அவ்விடத்தைக் கச்சு விரித்தாற் போல அழகு பெறுத்து மென்றதனால், நம்மினுயர்ச்சியையுடைய தலைவன் நமது நல்வினையால் தனது பெருமை தானுமொழிந்து இவ்விடத்தே வந்து கூடி நமக்கும் உயர்ச்சியுளதாக்கி நம்மை அழகுபெறுத்துகின்றான் என்று உள்ளுறை யுவமமெய்திற்று."
(குறிஞ்சிப். 196-199. உரை)

'வம்பு விரி கொட்டில்' "வம்பு=இங்கே செங்கச்சு"
(பெருங். 1. 38:—82.)

'வம்பு விசித்தியாத்த செம்பொற் கச்சையர்'
"வம்பு=அரைக்கச்சு. பொற்கச்சு=பொன்னுடை"
(பெருங். 1. 39:—31.)

'வம்புமீக்கூரும் பொங்கிளமுலை' (ஷை 1. 41:—79.)

வம்பு நெருக் குற்ற பொங்கிளமுலை (ஷை 1. 46:—244.)

'வம்பணி யானை' 'கச்சணிந்த யானை' (புறம். 37. 333. உரை.)

ஒன்றும் பலவுமான நிறங்கொண்டு அழகுடையனவாய உடை, விரிப்பு முதலியவற்றைக் கச்சு என்பர். மணமெனவுமுண்டு. (அகம். 99. 107. 250. 341; நற். 106; சிந். 853; மணி. 8:—11.)

10. நிகர்மலர்.

'நெய்தற் கூம்புவிடு நிகர் மலரன்ன
வேந் தெழின் மழைக் கண்' (அகம். 83)

'தெண்ணீராய்சுனை நிகர்மலர் போன்மென நசைஇ
வீதேர் பறவை விழையும்
போதார் கூந்தனங் காதலி கண்ணே' (அகம். 371)

'புன்னைத் தாது சேர் நிகர்மலர்' (குறுந். 311)

'தெண்ணீர் நிகர் மலர் புரையும்
நன் மலர் மழைக் கண்' (குறுந். 329)

'குவளைநீர் வார்நிகர் மலரன்ன நின்
பேரமர் மழைக் கண்டெண் பனி கொளவே' (நற். 391)

'அரும்பவிழ்முல்லை நிகர்மலர் நெல்லொடு தூஉய்'
(சிலப்.9: 1 2)

'நிகர்மலர் நீயே கொணர் வாய்' (மணிமே. 3:—15)

விழு நிகர் மலர் (பரிபா. 9:—5)

11. படுசினை ஐங். 142 படுநுகம்=பெரியபாரம் (சிந்.203) பெருங் 4. 2:—9. பெருங் 4. 15:—32.

12. கயந்துகளாதல்.

1. துணிகயந் துகள்பட்ட தூங்கழல் வெஞ்சுரம் (கலி. 20. 6)
2. 'துணிகயந் துகள்படத் துளங்கிய வதுபோற் றெளியாச் [சிந்தையன்' (மணிமே. 24:—84)
3. 'துகளறத் துணிந்த மணிமரு டெண்ணீர்க் குவளையம் பைஞ்சுனை' துகளற=கலக்கமற. (மலைபடு:—250—1. உரை.)
(அகம். 184. 263. புறம். 266. 389. பார்க்க.)

13. கயம்.

வண்டிமிர் பொய்கையும் வாவியுங் கயமும்
கேணியுங் கிணறும் நீணிலப் படுவும்

பொய்கை= மானிடராக்காத நீர்நிலை. வாவி= ஆற்றி லுள்ளவோடை (சிந். 337. உரை)

கயம் = ஆழமானநீர்நிலை (சிந். 592 புறம் 389) கேணி = சிறியகுளம். படு = மடு.

14. கம்மென.

விரைய. 'கேழலட்ட நற்கோட்
சேந்நா யேற்றை கம்மென வீர்ப்ப' (அகம். 111)

மணம்.

'காடே கம்மென்றன்றே' (அகம். 23.) 'மலர்ந்த கருங்கா னுணவின் பெருஞ் சினைவான் பூச்செம் மணற் சிறுநெறி கம்மென வரிப்ப' (அகம். 345)

15. நயவர. அகம். 99, 229, 279, 335, 352. ஐங், 88, 365, 419. கலி. 40.

16. அல்கல். நாள். அகம் 127. 241. 281. 313 ஐங் 470. மலைபடு. 443. உரை. குறுங். 226. 381. நாளும். 365. இரவு. கலி 65. 90. 92. 115. இரவும் எல்லையும் படரட வருந்துதலின் அல்கலும் என்றுள் அகம். 313.

17. படுதல் = துயிலுதல். (கலி. 49:—22)

'வானமூர்ந்த வயங்கொளி மண்டில, நெருப்பெனச் சிவந்தவுருப் பவிரங்காடு' எனக் காடுறையுலகத்துப் பாலைவந்தது (தொல். பொ. 13. உரை) என்றும், 'வானமூர்ந்த' என்னும் அகப்பாட்டினுள் 'மெய்புகுவன்ன கைகவர் முயக்கம் அவரும் பெறுகுவர் மன்னே' எனக்கூறி அழுதன் மேவாவாய்க் கண்ணுந் துயிலுமென இரக்கமீக் கூறியவாறு முணர்க என்றும், 'குன்றியன்ன' என்னும் அகப்பாட்டும் அது என்றும் (ஷை, 15. உரை) ஆசிரியர் நச்சினார்க்கினியர் குறித்துள்ளார்.

'நீர்வார் நிகர்மலர் கடுப்ப' அஞ்சுடர் நெடுங்கொடி பொற்பத்தோன்றி' என்னும் அடிகளைக் 'கடுப்ப' 'பொற்ப' ஆட்சிக்கெடுத்துக் காட்டினர் ஆசிரியர் பேராசிரியர். (தொல். உவ. 15. உரை)

ஔவையார் வரலாற்றைப் புறநானூறு முதலியவற்றிற் காணலாம்.

கல்லாட நூலாராய்ச்சி

திருவாளர். E. R. நாசிம்மஐயங்கார் அவர்கள் B.A., B.L., சேலம்.

ஆக்கியோன் பெயர்பெற்ற நூல்களுக்கு எடுத்துக் காட்டாக வச்சணந்திமாலை உரையாசிரியர் ஆண்ட நூல்களில் கல்லாடம் ஒன்றும். இதன் ஆசிரியர் கல்லாடர் என்னும் புலவர். இப்பெயர் வகித்த புலவர் பலருளர். பதினொன்றாந் திருமுறையில் கண்ணப்பர் திருமறம் இயற்றிய புலவர் இப்பெயரால் விளங்குவர். இவர் இயற்பெயரால் விளங்காது புனைபெயர் பூண்டாரென்பதைப் பின்னர் கூறுவாம். தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரிகளில் ஒருவர் கல்லாடர் எனும் பெயருடையவர். இவ்வாசிரியர் இளம்பூரணர் உரையைத் தழுவியும் அதனை விளக்கியும் போந்தாராதலின் இவர் 13ம் நூற்றாண்டில் இருந்தவராவர். சங்க காலத்துப் புலவர் ஒருவரும் கல்லாடர் எனப்படுவர். கல்லாட நூலின் சிறப்புப் பாயிரம் இதனைச் சங்க நூலெனும் பொருள் படும்படிப் பகருமாயினும் இதன் அகச் சான்றுகள் சங்ககாலத் தன்றெனப் புகலுமாதலின் இதனைச் சங்க காலப் புலவர் மேலேற்றிக் கூற வியலாது. இதனுரையாசிரியர் மயிலேறும் பெருமாள் பிள்ளை சிறப்புப் பாயிரத்திற்கு உரைவரையாது விடுத்த காரணத்தான் இதனை உரையாசிரியர் ஒதினாரெனக் கொள்ளத்தகும். இஃதுண்மையாயின் உரையாசிரியர் ஆராயாது தமது காலத்து நிலவியிருந்த கருத்தை உரைத்தாரென்றல் பொருந்துமென்க.

திருவாளர் சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் செந்தமிழத் தொகுதி 15-ல் கல்லாட நூலில் காணப்படும் சிலவகச் சான்றுகளை ஆராய்ந்து கல்லாடம் 9-ம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதாகுமென்றும், கல்லாடச் செய்யுட்களை உரையாசிரியர் மேற்கோளாட்சி கொள்ளாத காரணத்தான் கல்லாடம் 13-ம் நூற்றுண்டினதாகுமென்றும், தமது முடிபைக் கூறியுள்ளார். இவ்வறிஞர் தமது ஆராய்ச்சியில் கல்லாடம் என்னும் பெயரை வச்சணந்திமாலை யுரைகாரர் ஆட்சிகொண்டுள்ளதைக் கருதவில்லை.

வச்சணந்திமாலை உரை 12-ம் நூற்றாண்டில் வரையப் பட்ட தெனக் கூறலாமாதலின் கல்லாடம் 12ம் நூற்றாண்டிற்கும் 9ம் நூற்றாண்டிற்கும் இடைக் காலத்தில் தோன்றிய தென்பது பொருந்தும். இக்கருத்து, நம்பியாண்டார் நம்பிகள் இயற்றி யருளியுள்ள கோயிற் றிருப்பண்ணியர் திருவிருத்தத்தால் வலி யுறுவதைக் கூறுவாம். நம்பியாண்டார்

"வருவா சகத்தினின் முற்றுணர்ந் தோனை வண்டில்லை மன்னைத்
திருவாத வூர்ச் சிவ பாத்தியன் செய்திருச் சிற்றம்பலப்
பொருளார் தருதிருக் கோவை கண்டேயு மற்றப் பொருளைத்
தெருளாத வுள்ளத் தவர்கவி பாடிச் சிரிப் பிப்பரே"

என்னும் செய்யுளில் திருக் கோவையாரின் பெருமையைப் புலவர்களும் அறியவில்லையே யென்று வருந்திக் கூறுகின்றார். சிலபுலவர் இயற்றும் நூலின் பெருமை செவ்வனே உணர்வ தற்குப் பலவாண்டுகள் இடைப்படுவதை அனுபவத்தால் அறிய லாம். எனவே மணிவாசகனார் காலம் நம்பியாண்டார் காலத் திற்கு சிலநூற்றாண்டு முன்னராகுமென ஊகிக்கலாம். கல் லாடநூல் திருக்கோவையாரின் பெருமையை எடுத்துக்கூறவே எழுந்த தென்று கூறுவராதலின் கல்லாடநூல் நம்பியாண்டார் காலத்திற்கு முன் இயற்றப்படவில்லை யெனலாம். நம்பியாண் டார் 10-ம் நூற்றாண்டிறுதியிலும் 11-ம் நூற்றாண்டின் தொடக் கத்திலும் திகழ்ந்தவராவர். எனவே கல்லாட நூல் நம்பியாண் டார் நம்பிகளின் காலத்திற்கும் பின்னர், நம்பியாண்டார் கருத்தை நிலை நாட்டவே எழுந்த தென்றும் கூறலாமாகலின் கல்லாடம் 11ம் நூற்றாண்டினிடையில் இயற்றப்பட்டதென்பது போதரும்.

திருவாளர் வேதாசலம் என்னும் மறைமலையடிகள்என்பார் மணிவாசகனார் 2-ம் நூற்றாண்டில் அவதரித்தா ரென்பதற்குக் கல்லாட நூலை ஓர் சிறந்த ஆதரவாகக் கொண்டார். இவ்வா ராய்ச்சியாளர் கருத்து, கல்லாடம் 6-ம் நூற்றாண்டில் இயற்றப் பட்ட தென்பது. இவ்வாராய்ச்சியில் வேறு பல சான்றுகளை யும் எடுத்தாண்டுள்ளாரெனினும் ஆராய்ச்சிக்கு அடிப்படை யாகக் கொண்ட கருத்துக்கள் வழுவுடையனவாகத் தோன்று

தலின் இவர் முடிபை ஏற்பதற்குச் சிலதடைகளுண்டென்பதை ஆங்காங்குக் கூறுவாம்.

கல்லாடம் ஓர் கோவை நூல். கூடற்பெருமானை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு அப் பெருமான் ஆற்றிய திருவிளையாடல்கள் அறுபத்து நான்கில் சிலவற்றை அப்பெருமானின் புகழ்களாகக் கூறுமாகலின் கல்லாடம் திருவிளையாடற்புராணத் தொடும் ஓரியைபுடையதாகும். கல்லாட நூலாசிரியர்,

"கூடற் பதிவரு மாடற் பரியோன்
எட்டெட் டியற்றிய கட்டமர் சடையோன்"

என்று திருவிளையாடல்களின் தொகை அறுபத்து நான்கெனத் தொகை கூறியுள்ளார். இந்நூலில் முப்பத்து நான்கு திருவிளையாடல்களே கூறப்பட்டுள்ளன. எனவே கல்லாடருக்கு முன்பு அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் விரித்துக் கூறும் நூல் ஒன்றிருந்ததென்பது போதரும். மணிவாசகனார் காலவாராய்ச்சியாளர் கல்லாட நூலை ஆதாரவாகக் கொண்டாரேனும் திருவிளையாடல்களைக் கூறும் நூல் ஒன்றுண்டென்பதையும் அது யாதென்பதையும் கருதாதது ஓர் குறைபாடுடையதாகும். இவ்வாராய்ச்சியாளர் தமிழ் நூல்களையே ஆதாரவாகக் கொண்டார். தமிழ் நூல்களின் ஆசிரியர் தமது நூல்கள் வடமொழி நூல்களின் மொழி பெயர்ப்பென்றே கூறுவதாகத் தெரிகிறது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரையர் மணிவாசகனார் முதலியோர் திருப்பாட்டுக்களாலும் அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் பெறப்படா. இவ்வடியார்கள் அறுபத்து நான்கென்னும் தொகையையும் யாண்டும் கூறவில்லை. வேறு தமிழ்நூல்கள் இருந்தனவெனக் கூறுவாருளராயின் அவருரை வெற்றுரையெனத்தகும். திருவிளையாடற் புராணங்கள் 13-ம் நூற்றாண்டில் இயற்றப்பட்டன வென்பதை தனிக் கட்டுரையில் கூறுவாம். எனவே வடமொழி நூல்கள் 13ம் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலத்தே தோன்றினவாகுமென்பது தெளிவாம். வடமொழி நூல்களில் உத்தரபுராணம் முந்தியதென்றும் ஆலாசிய மகாத்துமியம் பிந்தியதென்றும் உணரலாகும். கல்லாடருக்கு முன்யிருந்தநூல் வடமொழி உத்தரபுராணமே யாகும். இதுவே

பழைய புராணமெனப்படும். இப்புராணத்தில் மூர்த்தி நாயனார் திருவிளையாடலும் காரியார் நாரியார் பாப்பகுந்த திருவிளையாடலும் கூறப்பட்டுள்ளன. (இந்நூல் இதுபோது வழக்கினின்றும் வீழ்ந்ததென்று டாக்டர் ஐயரவர்கள் கூறியுள்ளதால் அறியலாமாயினும் இந்நூலின் கருத்துக்களெல்லாம் இதன் மொழி பெயர்ப்பாகிய பெரும்பற்றப்புலியூர் நம்பிகள் புராணத்தாலறியலாகும். இக்கட்டுரையில் வடமொழி நூலின் கருத்தைக் கூறுமிடத்தெல்லாம் நம்பிகள் திருவிளையாடற் புராணத்தைக் கொண்டு கூறினுமென்க.) ஆலாசிய மகாத்துமியத்தின் ஆசிரியர் இவ்விரு திருவிளையாடல்களையும் நீக்கி, மற்றைத் திருவிளையாடல்களை செவ்விதின் ஆராய்ந்து, அத் திருவிளையாடல்கள் அழகுற வைப்பு முறையை மாற்றிக் கூறியுள்ளார். கல்லாட நூலில் மூர்த்திநாயனர் வரலாறு கூறப்பட்டிருப்பதால் கல்லாடர் உத்தரபுராணத்தை யொட்டிக் கூறினராவர். கல்லாட நூல் 11-ம் நூற்றாண்டிடையில் இயற்றப்பட்டதென்று முன் கூறினும். உத்தரபுராணம் 11-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றியதாகும். ஆலாசியமகாத்துமியம் கல்லாட நூலிற்குப் பிற்பட்ட காலத்தில் தோன்றியதெனலாம்.

திருவிளையாடல்கள் அறுபத்து நான்கில், ஆறுவரலாறுகள் சிலப்பதிகாரத்தாலும், பதினன்கு வரலாறுகள் திருஞான சம்பந்தர் திருநாவுக்கரையர் தேவாரங்களானும், பதினன்கு வரலாறுகள் திருவாசகத்தானும், மூர்த்தியார் வரலாறு ஒன்று சுந்தரமூர்த்திகள் தொண்டர் தொகையானும் ஆக 35 வரலாறுகள் பழையனவெனலாம். மற்றை இருபத்தொன்பது வரலாறுகள் புதியனவாகும். திருவிளையாடற் புராணங்களில் சேரமான் பெருமாள் நாயனர் காலத்தும் ஓர் அருட்செயல் நடந்ததாகக் கூறப்படுமாதலால் இப்புதியனவான திருவிளையாடல்களும் மற்றைத் திருவிளையாடல்களோடு கர்ண பரம்பரையாய் வழங்கினவாகும். இவைகளை வடமொழிப் புராணகாரர் தொகுத்துக் கூறினராவர். இத்தொகுப்பில் வரலாறுகள் ஆராயப்படாது அவைகள் வழங்கியவாறே புராணத்தில் கூறப்பட்டனவெனலாம்; எனவே திருவிளையாடல்களை ஆராயின்

திருவிளையாடற்புராண காலமும் இதன்பின் தோன்றிய கல்லாட நூலின் காலமும் புலப்படும்.

சான்றழைத்த வரலாறொன்று சிலப்பதிகார நூலின் வஞ்சினமாலையில்,

"வன்னியு மரமு மடைப் பள்ளியுஞ் சான்றாக
முன்னி றுத்திக் காட்டிய மொய் குழலாள்"

என்னும் அடிகளில் கூறப்பட்டது. இவ்வரலாறு சிறிது மாறுபட வன்னியுங் கிணறு மிலிங்கமும் அழைத்த திருவிளையாடலெனப் பிற்காலத்து வழங்கியதாகும். இது சான்றழைத்த திருவிளையாடலென்றும் புராணத்தில் காணப்பெறும். புராணங்களில் இச்செய்தி நிகழ்ந்தவிடம் திரும்புறம்பயமென்று கூறப்பட்டுளது. இவ்வரலாற்றில் குறிக்கப்பட்ட கன்னி காவிரிப் பூம்பட்டினத்துக் குரியவளென்று சிலப்பதிகாரத்திலும், புராணங்களிலும் கூறப்பட்டுளது. எனவே இவ்வரலாறு பழைய தென்பதற்கையமில்லை. புராணகாலத்து பழைய வரலாறு சிறிதுமாறுபடக் கூறப்பட்டதென்பது தெளிவாம். வடமொழிப் புராண காலத்து செய்தி நிகழ்ந்தவிடம் திருப்புறம்பயமென்று வழங்கியதை புராணகாரர் உள்ளவாறே கூறினாரவர். வடமொழிப் புராணத்தை மொழி பெயர்த்த தமிழ்ப் புலவர்களும் அவ்வாறே கூறினாரவர். சேக்கிழார் தமது புராணத்தில் செய்தி நிகழ்ந்தவிடம் திருமருகல் என்று கூறி திருஞான சம்பந்தர் பதிகத்தையும் ஆதரவு காட்டியுள்ளார். வரலாற்றில் குறித்த கன்னி வைப்பூர்க்கோன் மகள் என்றார். இவ்வைப்பூர் திருமருகலுக்கு அருகிலுள்ளவூராகும். சேக்கிழார் கூறிய வரலாற்றுக்குச் சான்று ஒன்றுமில்லையாதலான் இதுவும் திருவிளையாடற் புராணக்கதை யென்றே கொள்ளப்படும். சேக்கிழார் புராணத்தும் திருவிளையாடற் புராணங்களிலும் இவ்வருட் செயலை திருஞானசம்பந்தர் ஆற்றியதாகக் கூறப்படும். சேக்கிழார் வரலாறும் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்ட வரலாற்றை யொட்டியதே யாகும். வரலாறுகள் பேதம் படக் கூறப்படும் வழக்கை மற்றைப் புராணங்களிலும் காணலாகும். இதனைப்

புராணகாரர் மரபெனக் கொள்ளவமையும். வடமொழியாளர் இதனைக் கற்பபேதம் என்று கூறுவர். தமிழ்மொழிப் புராணங் களையே ஆதாரவாகக் கொள்ளின் விகற்பங்களுக்குக் காரணம் கூறவியலாது. இவ்வரலாறுகள் பலகாலத்தில் நிகழ்ந்தனவாகக் கொள்வோமாயின் திருவிளையாடல்கள் பல்கி அறுபத்து நான் கென்னும் தொகைக்கு மேற்படுமாறறிக.

இதனையோர்ந்தே பெரும் பற்றப்புலியூர் நம்பிகள் தமது புராணத்தில் திருமருகலிலும் முன் கூறிய செய்தி நடந்த தென்று கூறி சேக்கிழார் வரலாற்றையும் அறுபத்து நான்கென் னும் பழைய வரலாற்றில் அடக்கிக் கூறியிருப்பதும் காண்க. நம்பிகள் வடமொழிநூல் வரலாற்றை மாற்றிக் கூறுவதற்கு அஞ்சினராவர். (இதனல் நம்பிகள் புராணம் சேக்கிழார் புரா ணத்திற்கு பிற்பட்டகாலத்தில் இயற்றப்பட்டதென்பது தெளி வாம்.) இதனல் பழைய வரலாறு ஒன்றையே புராணகாரர் விகற்பித்து கூறினர் என்பது தெளிவாம்.

பாணன் வரலாறு மூன்றும், பாணன் மனைவி வரலாறு ஒன்றும் ஆக நான்கு திருவிளையாடல்கள் புராணங்களில் கூறப் பட்டுள்ளன. இவைகளில் ஒன்றே பழையதாகும். மற்றை மூன்றும் பிற்காலத்தனவெனலாம்; திருஞான சம்பந்தரால் குறிக்கப்பட்ட பாணன் கூடற்பிரானிடத்துத் திருமுகம்பெற்று சேரமான் பெருமாள் நாயனரிடம்சென்று அதனைக்காட்டி பரிசு பெற்றானென்று திருவிளையாடற் புராணங்களிலும் சேக்கிழார் புராணத்திலும் கூறப்பட்டுளது. இவ்வரலாறு கால இடர்ப் பாட்டை உடையதாகும். திருஞான சம்பந்தருக்கு ஒரு நூற் ருண்டிற்கு மேற்பட்ட காலத்தில் சேரமான் பெருமாள்நாயனர் அவதரித்தாராவர். இம்முரண்பாட்டுக்கு திருவிளையாடற்புராண காரர்களே காரணமென்று திரு மறைமலையடிகள் கருதுவர். தமிழ்ப் புராணங்கள் வடமொழிப் புராணங்களின் மொழி பெயர்ப்பென்பதைக் கருதாதலினல் இவ்வாராய்ச்சியாளர்க்கு முரண்பாட்டின் காரணம் விளங்கவில்லை யென்னலாம். வட மொழிப் புராணத்தில் இம்முரண்பாடு காணப்படும். எனவே வடமொழிப் புராணம் சேரமான் காலத்திற்கும் (அதாவது 9ம்

நூற்றாண்டிற்குப்) பிற்பட்டதாகும் கல்லாடமும் புராணத் திற்கும் பிற்பட்டதாகும்.

பாணன் வரலாற்றால் பழைய வரலாறு ஒன்றினை அடிப் படையாகக் கொண்டு வேறு புதிய வரலாறுகள் கூறப்பட்டன வென்பது தெளிவாம். இப்புதிய வரலாறுகள் வடமொழிப் புராணகாரர் காலத்திற்கும் சேரமான் காலத்திற்கும் இடையில் புணர்க்கப்பட்டனவெனலாம். இப்புதிய வரலாறுகளின் சற் றேக்குறைய தொகை 29 என்று முன் கூறினும். இவையனைத் தும் கல்லாடத்தினும் கூறப்பட்டனவாகும். இப்புதிய வரலாறு களில் நக்கீரர், உக்கிரப்பெருவழுதி, மூர்த்திநாயனார் முதலி யோர் செய்திகளும் அடங்கினவாகுமென்பதைக் காட்டுவாம்.

நக்கீரருக்கு ஓர் சிறப்பைக் கூறுவதற்கு இறையனாருரை, நக்கீரரால் வரையப்பட்டு குருசீடர் வழிமுறையில் கர்ணபரம் பரையாக ஓதப்பட்டு வந்ததென்று, கூறப்பட்டதாகும். இவ் வுரையில் சங்ககாலத்துச் செய்யுட்களும், சிலப்பதிகாரமும், பாண்டிக் கோவையும் ஆட்சி பெற்றுள்ளன. உரையில் கூறப் படும் சில துறைகள் புதியனவாகச் சங்ககாலத்து வழக்கினோடு மாறுபட்டனவாகத் தோன்றும். இப்புதிய துறைகளுக்கு சங்க விலக்கியங்களினின்றும் மேற்கோள் காட்டவியலாது. இத்துறைகளுக்கு பிற்காலத்து இலக்கியங்களிலிருந்தே எடுத் துக்காட்டு கூறவேண்டும். எனவே இறையனாருரையை சங்க காலத்து நக்கீரர்மேல் ஏற்றிக் கூறுவது பொருந்தாது. உரை தோன்றிய காலத்திற்கும் சங்ககாலத்திற்கும் இடையில் 7 அல் லது 8 நூற்றாண்டாகும். குரு சீட முறையில் 13 பெயர்கள் கூறப்பட்டிருத்தலும் உரைக் கூற்றை வலியுறுத்தாது.

இறையனார் உரையின் காலத்தை யறிவதற்கு பாண்டிக் கோவை உதவுபுரியும். இக்கோவை நூலின் பாட்டுடைத் தலை வன் அரிகேசரி நெடுமாறன் என்பவன். இவனைக் கூன்பாண் டியனென்றும் கூறுவர். இம்மன்னன் கி. பி. 7ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் செங்கோலோச்சினான். இவ்வரசன் சைனமதத்தி லிருந்து நீங்கிய வரலாறு கோவை நூலில் யாண்டும் கூறப் படவில்லை. இவ்வரசனைப் பற்றிய கதையும் பிற்காலத்ததாகு

மெனக் கூறலாம். இக்கோவையில் பலபோர்க்களங்கள் கூறப் பட்டுள்ளன. இவைகளில் பாழி, செங்கிலம், நெல்வேலி என்ற மூன்றும் வேள்விக்குடி சாசனத்திலும் காணப்படும். கோவை யில் காணப்படும் மற்றைப் போர்க் களங்கள் சாசனத்தில் காணப்படா. இப்போர்க்களங்களிற் சில இம்மன்னன் முன் னோர் காலத்திற்குரியவையாகும். வேள்விக்குடி சாசனத்தில் இம்மன்னன் முன்னோர்கள் போர்க்களங்களொன்றும் கூறப் படாமையால் கோவையில் கண்ட மற்றைப் போர்க்களங்கள் புணர்ப்பாகுமெனவும் இந்நூல் 8ம் நூற்றாண்டிற்கும் பிற்பட்ட தெனவும் சிலவாராய்ச்சியாளர் கூறுவர். பாட்டுடைத்தலைவன் முன்னோர் செயல்களையும் பாட்டுடைத் தலைவன் செயல்களாகக் கூறுவதோர் மரபையறியாது ஆராய்ச்சியாளர் கூறுங்கூற்றை மறுக்க. கோவை நூலில் கூறப்படும் செயல்களனைத்தும் உண்மையேயாகும். கோவைநூல் அரிகேசரியின் இறுதிக் காலத்தில் (7ம் நூற்றாண்டிறுதில்) பாடப்பட்டதாகும்.

வேள்விக்குடி சாசனத்தில் அரிகேசரியின் முன்னோர் களான கடுங்கோன், அவனிசூளாமணி, சேந்தன் என்னும் மூவர் செயல்கள் கூறப்படாதிருப்பது ஓர் ஐயப்பாடுடைய தாகும். பாண்டிய நாட்டை களப்பிரர் என்னும் ஓர் புதிய குலத்தினர் வெளவி சில நூற்றாண்டுகள் வரையில் அரசு புரிந் தாரென்பதொரு வரலாறு சாசனத்தில் காணப்படும். கடுங்கோ னென்னும் பாண்டியன் இப்பகைவரைவென்று அவர்களை தன்னாட்டினின்றும் அகற்றித் தன்னுரிமையைப் பெற்று அர சாட்சி புரிந்தானென்று வேள்விக்குடி சாசனங் கூறும். பகை வரை வென்றதற் கறிகுறியாக ஒரு போர்க்களமேனுங் கூறா திருத்தல் வியப்பைத்தருகின்றது. அரிகேசரி முதல் பிற்பட்ட அரசர்களின் முறையை வேறுசாசனத்தாலும் அறியலாகும். கடுங்கோன், அவனிசூளாமணி என்றவர்களைக் குறிக்கும்வேறு சாசனச் சான்றுகள் இல்லை. எனவே வேள்விக்குடி சாசனத்தில் இவ்விருவரசர்களைக் குறித்த வரலாறு பாண்டிக்கோவையோடு முரண்படுவதால் வேள்விக்குடி சாசனத்தை ஏற்றுக்கொள் வதற்கு ஐயப்பாடுண்டென்க. இதனைக்குறித்து மூர்த்திநாயனார் வரலாற்றில் வேறு காரணங்களைக் காட்டுவோம்.

பழைய பாடற்றிரட்டு.

தமிழ்ப்பேராசிரியர் திரு. L. உலகநாத பிள்ளையவர்கள்.

சோழநாட்டின் உயர்வு, இன்றளவும் உலகை அணி செய்யுமாறு சிறந்து விளங்கும் பலவற்றுள், தஞ்சை, 'சரசுவதிமால்' என்னும் சுவடிநிலையமும் ஒன்றாகும். இஃது இற்றைக்கு நூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னர் தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர் திலகம்- இரண்டாவது சரபோசி வேந்தனால் நிறுவப் பெற்றது. இதில் எட்டுச் சுவடிகளாக, தமிழ், தெலுங்கு, மராட்டியம், சம்ஸ்கிருதம் முதலிய பலமொழிகளிலும் இதுவரையில் வெளிவரப்பெறாத பல நூற்றுக்கணக்கான நூல்கள் உள்ளன. 'பழையபாடற்றிரட்டு' என்னும் இத்தொகுப்பு, மேற்குறித்த சரசுவதிமாலில் உள்ள பல தமிழ்ப்பாக்கள் தொகுப்பு நூல்களிலிருந்து திரட்டப்பெற்றுள்ளது. இத்திரட்டின் பெரும் பாகம், இதுவரையில் வெளிவராதனவாகும்.

தள்ளைக்கு மன்னமிடார் தமைக்காமதேனுவெனச் சாற்றி
[வீணே
கொள்ளைச்செந் தமிழுகுத்தால் மிடிபோமோ புலவீர்காள்
[கூறக் கேளீர்
வெள்ளைத்தண் குழைகொளிரு பெண்ணையணை யொருபெண்ணை
[வண்கைத் தஞ்சை
வெள்ளைப்பிள்ளை யைப்புகழ்ந்தால் கறுப்புப் பிள்ளைக்
[கொடியாள் மேவிடாளே. 1

வள்ளற்கைத் தலமில்லா மானிடரைப் பாடியவர் வாசற்
[போந்து
தள்ளத்தள் ளுண்டடைந்த நோயெல்லாம் புலவீர்காள்
[சாற்றக் கேளீ
ருள்ளத்தி னன்பர்கண்ணீ ரூற்றவலஞ் சுழியில் வளர்ந்
[தொருகொம் போங்கும்
வெள்ளத்தி யடியின்பா லிட்டத்தால் நமக்காறி விடுங்கண்
[டீரே. 2

ஒருபாதி பச்சையு மொருபாதி பவளமு மொருபாதி
[களபங்களும்
ஒருபாதி வெண்ணீறு மொருபாதி முல்லைநகையு
[மொருபாதி முளரிநகையும்
மருவார் மலர்க்கூந்த லொருபாதி யொருபாதி மலையளக
[பாரமுடியும்
மையிட்ட கண்ணுமைக் கிறிட்ட கண்ணுமொரு வாழ்க்கண்
[ணரைக்கண்களும்
பொருவா ரணப்போர் புரிந்தமுலை யொன்றுமப்
[போர்த்தொழிலை விட்டதொன்றும்
பொன்னுடை யொன்றுசை மின்னுடை யொன்றுமெதிர்
[போராடு முகுடமுடியும்
பாரசர் முடியிடறு பங்கயத் தாளுமென் பாவனைக்
[குள்ளாகுமோ
பஞ்சநதி முடிவைத்த பஞ்சநதி வாணனே பஞ்சாக்
[கரரூபனே 3

நெய்யொழுகு சூலமு நிணமொழுகு மழுவுமதில் நின்றொழுகு
[செங்குருதியும்
நிலவொழுக ஒருவிழியில் வெயிலொழுக ஒருவிழியில்
[நெருப்பொழுக நின்றநிலையும்
மையொழுகு களமுமனல் மெய்யொழுகு மழுவும் வழிந்தொழுகு
[பால்மதியமும்
மதுரமொழுகு தேறல் மழையொழுகு கொன்றையும்
[மணமொழுகு பாதமலரும்
கையொழுகு மலரோடு கண்ணொழுகு நீரோடு கண்டுதொழு
[தேத்தநெஞ்சக்
கல்லுக்கு ளன்பு கசிந்துருகு தென் செய்குவேன்
பையொழுகு பணமுடியில் மணியொழுகு பன்னகா பரணந்
[தரித்தபுயனே
பஞ்சநதி முடிவைத்த பஞ்சநதி வாணனே பஞ்சாக்
[கரரூபனே 4

கங்குலிலே நடப்பார்க்கும் காலிலே கண்வேணுங் கண்டீ
[ரென்று
சங்கரனார் திருத்தாளிற் கண்ணிடந்து சாத்திவைத்த
[சமத்தைப் பாரீர்
அங்கணனாரூரர் ஆடரவக் கிண்கிணிக்கா வருமையெல்லாஞ்
செங்கணெடு மாலினுக்கே யல்லாம லொருவருக்குந் தெரிந்தி
[டாதே 5

ஆற்றிலே யிட்டபொரு ளழைத்தல் பரவைக்குரைத்த லன்று
[யாமக்
கூற்றிலே தனிச்சேறல் மூன்றுதவி யூரனுக்குக் கொடுத்தாள்
[கின்றாய்
சேற்றிலே யலர்ந்தெழுந்த செங்கழுநீர்த் தொடையழகா
[தென்றல் வாசற்
காற்றிலே வீற்றிருக்குந் தேவரகண்டா விருண்ட கண்டத்
[தானே. 6

எத்தலப் புறத்தினும் பிறப்பிறப்பி னுட்படு
மெவ்வுயிர்க்கு மயன்விதிப்ப தென்பதே மிகச்சொல்வார்
கைத்தலத்தி லவர்பெருங் கபாலமாய வன்பெருங்
கருந்தலைக்கு ளொன்றுபட்ட கருமமார் விதித்ததோ
வத்தனைக்கு மொருவரா யளிப்பதோ வதன்றியு
மன்னவேத னாதியோரை யருளெனப் படைத்ததோ
சித்தமித் தனைக்கெலாந் தியக்கமா நமக்கெலாந்
தெரியுமோ தியாகராசர் திருவுளச் செயற்கையே 7

அரிவைமார் முலைக்கிடும் படீரதூளி மொய்ப்பவு
மரும்பெறற் சிறார்தவழ்ந் தடிப்பொடிக்குள் மூழ்கவும்
பொருவிலாத யானைவாசி சேனையின் பராகமே
பொதுளவுந் திரிந்தவம் புரிந்துபோக வைப்பரோ
கருவெழாத வகைநமக்கு மாலயன் புரந்தரன்
கரங்குவிந்து ளங்கனிந்து கண்குளிர்ந்த பங்குனி
திருவிழா வெழுந்தபூழி யுடலைமூழ்க விடுவரோ
தெரியுமோ தியாகராசர் திருவுளச் செயற்கையே 8

ஐயமீ புரங்கள்வென்ற தொக்குமிக்க காலனுர்
அழியவென்ற தொக்குமற் றனைத்துமொக்கு மாயினும்
வெய்யகாம தகனரென்ன விருதுசின்ன வோசையால்
வெட்கினே னுமக்குமிந்த விருதுசொல்ல வேற்குமோ
வெய்யவாசு கங்கள்பட்டு வெருவியோடி யாணிலா
தேழைமேனி புக்கொளித்து மின்னம்மாரன் வருமெனச்
செய்யமேனி பாதியும் பிறப்படாத கமலைவாழ்
தியாகராசரே சிறந்த தென்றல்வாச லழகரே 9

துய்யநந்த வனமுமலர்ச் சோலையுங் காவிரிநாடுந் தொண்டர்
[போற்றும்
ஐயனந்திக் காப்பழகு மாயிரக்கான் மண்டபமு மாழித் தேருஞ்
செய்யனந்தஞ் சூழ்ந்த திருவாரூரை யான்வணங்கித் தெரிசித்
[தேத்தக்
கையனந்தம் நாவனந்தம் விழியனந்தம் படைத்திலனே
[கமலத் தோனே 10

பண்காணுந் தமிழ்ப்புலவீ ரினத்தோடே யினஞ்சேரும் பரிசே
[யல்லாற்
றண்காவி மலர்த்தடஞ்சூழ் காவிரிநாட் டொருபுதுமை
[தன்னைப் பாரீர்
கண்காண கரையான்மேல் வெண்காட னினிதிருப்பக் கண்டோ
[மந்த
வெண்காட னிடப்புறத்தே பச்சையன்னங் கலந்திருக்கும்
[விதங்கண் டோமே 11

கம்புபட்ட திரைசூழுங் கம்பையாற்றின் கரைபட்டார்
[நாரிகையால் கட்டும்பட்டார்
வம்புபட்ட தனத்தாலே வடுவும்பட்டார் மதர்ப்பட்டார்
[வாரணத்தி னுரியும் பட்டார்
வெம்புபட்ட மேனியிற்கல் லெறியும்பட்டார் வேடன்கா
[லுதையும்பட்டார் விடப்படாத
அம்புமுடி மேல்வில் லடியும்பட்டார் ஆரூரர்பட்டபா டார்பட்
[டாரே 12

மாவிருக்குந் தலத்திரண்டு மருந்திருக்கு மவரிடத்து வைத்திய
[நாதர்
சேவிருக்குங் கொடியுடையார் சென்றிருக்குந் தேடரியார்
[செவியின் மூவர்
பாவிருக்கு மலர்சடைமேற் பாம்பிருக்கு மால்பணியும் பாதத்
[தேயோர்
பூவிருக்கு மடையாளம் புள்ளிருக்கும் வேளூரெம் புனித
[னார்க்கே 13

புனம்போன தில்லை மயில்போன தில்லை புதிய கிள்ளை
யினம்போன தில்லை யிதண்போன தில்லை யிருதனத்தாற்
கனம்போன நுண்ணிடைக் கண்ணிற்கொள் ளாதெனக்
[கச்சியிலென்
மனம்போன தெப்படி பூமாது போன வழியறிந்தே 14

பெற்றத்தி லேவரு கோலமுந் தானுமென் பெண்மையுய்ய
முற்றத்தி லேவந்து முன்னிற்கு மோமுது வானவர்தஞ்
சுற்றத்தி லேகதிர் தோற்றத்தி லேதொல்லை நான்மறைநூ
லற்றத்தி லேகழுக் குன்றத்தி லேநிற்கு மற்புதனே 15

அருவிக் கிரிமக டன்னிடம் நின்வலங் கண்டதல்லா
லிருவர்க்கு மோரிரு பாகமுங் கண்டில மின்கனிவாய்
பருகிக் குமுதத் தமுதூற லுண்ட பசும்பதத்தே
யுருகிக் கலந்தன வோவிரு பாகமு முங்களுக்கே 16

நீடும் பிரமனை மாலைப்பெற் றானை நிறைந்தமறைக்
காடுமென் னெஞ்சும் விடாப்பழை யோனைக் கணிப்பவர்க்கு
நாடும்படியிற் பலவண்ட மீன்றநல் லக்கிழத்தி
கூடுங் கிழவனை யென்னே யுரைப்பர் குழகனென்றே 17

சந்ததமு மாடவல்ல சைவசோணா சலனார்
கந்தனுட மாமிதனைக் கைப்பிடித்தா ரம்மானை
கந்தனுட மாமிதனைக் கைப்பிடித்தா ராமாகி
இந்த வுலகுதனி லேற்குமோ வம்மானை
ஏற்குமென்றே கையில்மழு வேந்தினர்கா ணம்மானை 18

மாலறியாக் கள்ளனிவன் மன்றுதனி லேயிருந்து
கோலமுட னெடுத்துக் குன்றொளித்தா ரம்மானை
கோலமுட னெடுத்துக் குன்றொளித்தா ராமாகில்
கால்தலைகள் தோலெலும்பு கண்ட துண்டோ வம்மானை
கண்டல்ல இருகழுகு காத்திருக்கு மம்மானை 19

விரையார் குழலணங் கேவாணர் கோன்விய னுறைசுற்றுந்
திரைவாய் மரக்கலம் போலநின் றேன்கிழி தீட்டவென்று
னுரைவாய் பிழைவரு மென்றஞ்சி னேனுமை யுள்ளங்கொண்டு
வரைபாய வுமஞ்சி னேன்றிரு மேனி வருந்துமென்றே 20

மனுநீதி கண்ட வளவர் குலேசனு மாலைநல்கா
னினிநீ ரொருவர் விலக்க நில்லேனிணை யாரமுத்தின்
தனிநீர் வடமிட்டுச் சந்தனம் பூசித் தனித்தொருகை
பனிநீரை யூறவிட் டேபடுப் பேமலர்ப் பாயலிலே 21

மல்லற் புயத்துப் பொருகாளை சண்பக மாறன்பொற்றோள்
புல்லக் கிடப்பதன் றேமடவீர்முத்தம் பூட்டி யென்னைக்
கொல்லக் கிடத்து மிளந்தளிர் வாழைக் குருத்தைவிட்டு
மெல்லக் கிடத்திவைப் பீர்கொண்டு போயந்த வேம்படிக்கே 22

தண்டுவந் தான்மத னென்மேற் பொரப்பெற்ற தாயரது
கண்டுவந் தேது பகாரஞ் செய்தனர் கற்பகக்கா
கொண்டுவந் தான்சிவந் தான்மழ வேசன்றன் கோடையிலே
வண்டு வந்தால் தெரியு முயிர்போவதும் வாழ்வதுமே 23

பாலினு மென்சொல் குயிலினு மென்மொழிப் பாவைகொங்கை
மேலினுங் காம சரந்தைக்கு மோவட வேங்கடம்விட்
டாலினும் வேலை நடுவினும் பாம்பினு மாற்றரத்துங்
கோவினுங் கண்டுயில் வாய்மழ வாபள்ளி கொண்டவனே 24

முடியாது வாழவென் றூலன்று நீதந்த மோகமன்றிப்
பிடியா தொருசற்றுங் கண்டுயி லாது பெருகுங்கங்குல்
விடியாதுமுன்றி லகலா நிலாவென்னும் வெள்ளஞ் சற்றும்
வடியாது சண்பக மாறா மதுரை வரோதயனே 25

கிழக்கோதந் தெற்கி லிளந்தென்றல் மேற்கினிற் கீற்றுப்பிறை
யழற்கோது முத்தர்தந் திக்கினில் வாடை யதுவுமன்றிக்
குழற்கோகில் மென்குலக் கோகிலத்தைக் கொடுமை சொல்ல
வழக்கோசொல் சண்பக மாறு மதுரை வரோதயனே 26

புள்ளிகொண் டேயொரு மான்வந்த போதுவப் போதரக்கன்
துள்ளியங் கேவிழ வாளிதொட் டாய்தொண்டை நாடுடையாய்
அள்ளியங் கேவெண் ணெய் யெல்லாமருந்தி யரவணைமேற்
பள்ளி கொண்டாய் மழவா பராசு பயங்கரனே 27

பெருக்கெடுக் கும்புனல் வைகையின் மன்னரைப் பின்றொடர்ந்து
திருக்கடைக் கண்சிவந்தான் சிவந்தான் தென்முகரி யன்னீர்
முருக்கிதழ்ச் செங்கனி வாயணங் கேமுனி யேல்முனியேல்
மாக்கலக் காகமன் றோதமி யேனு மகிழ்நருமே 28

புல்லிவிட் டுப்பிரி கின்றவன்றே புயல்முந்து மெனச்
சொல்லி விட்டுப்பிரியப் பெற்றிலோந் தொண்டை நாடுகொள்ள
கொல்லி விட்டுச்செல் பராக்கிரம மாறன் குளிர்கொண்டலை
வல்லிவிட்டுக் கெடுத்தா லென்செய்யா தந்த வல்வியையே 29

கொத்தார் தொடைப்பள்ளி கொண்டான் மழவன்றென் [கோடையன்னீர்
கைத்தா மரைபட மாணிக்க மானது கண்குறுக
வித்தார நீலமணியான துவெண் முறுவல் செய்ய
அத்தா பழையநன் முத்தாச்சு நீதந்த வாரமின்றே 30

கட்டுண்டு மடியுண்டுந் தளையுண்டும் படுவதுசொற் கவியின்பாவே
மட்டுண்டு கரும்புறமாய் மயங்குவது மதுகாமே வழுங்காதாகி
முட்டுண்டு கிடப்பதுவு முடங்குவதும் பொய்மொழியே [முகங்கீழாக
வெட்டுண்டு கிடப்பதுவுந் தாறுகொண்ட கதலிகளே [வேறொன்றில்லை 31

இறைக்க வூறு மணற்கேணி யிடவேயூறு மிருநிதியங்
கறக்க வூறு மாவின்பால் கற்கவூறும் பேரறிவு
அறுக்க வூறு மறைக்கீரை யணுகவூறு மிந்திரியம்
துறக்கவூறு மெய்ஞ்ஞானந் துணியத்துணிய சிவபதமே 32

பொருளரி தாகிற் கேட்போர்க் கின்சொலு மரிதோ போந்தால்
விரைவுட னெழுத லோடல் வியந்தெதிர் கோடல் பீடத்
துரிமையி லிருத்தல் பாத பூசனை யுவப்பச் செய்தல்
பிரிபொழு துடனே செல்ல லெனுமிவை யேழும் பேறே 33

கோணிலை திரிந்து நாழி குறைபடப் பகல்கள் மிஞ்சி
நீணில மாரி யின்றி விளைவஃகிப் பசியு நீடிப்
பூணணி மகளிர் பொற்பிற் கற்பழிந் தறங்கள் மாறி
யாணை யிவ்வுலகு கேடா மரசுகோல் கோடி னென்றான் 34

விரியோத நெடுங்கடலில் வீழ்ந்தானோ விரைந் துரகன்
[விழுங்கினானோ
எரியோடி மகனிறக்கு மெனமகவான் முகில் மறைக்க வேவினானோ
கரியோதன் றிகிரியுஞ்செங் கதிரென்றே யிருள்பரந்த கணக்கி
[தென்னோ
பெரியோர்கள் திருவுளங்கள் பேதித்தா லெப்பொருளும்
[பேதியாதோ 35

மெய்ம் மானையும் சடையம்புலி மானை வெற்றியிடக்
கைம்மானை யுங்கொண்ட வேகம்ப வாணர்தென் கச்சிவெற்பி
லும்மானை யிந்தப் புனங்காக்கு நாங்க ளொளித்துக்கொள்ள
வம்மானை தானல்ல வேமன்ன ரேவிளை யாடுதற்கே 36

மேற்பார்க்க மைந்தருமூவா வெருதும் விளங்குகங்கை
நீர்ப்பாச்சலு நன்னிலமு முண்டாகியு நின்னிடத்திற்
பாற்பாக் கியவதி நீங்காதிருந்தும் பலிக்குழன்றா
யேற்பார்க் கிடாமலன்றோ பெருங்கோயி லிறையவனே 37

வழக்கன்றி தென்குல மான்கன்றை வாட்டுதல் மன்னரெல்லாந்
தொழகன்றிய பதச் சோழேந் திரசுரந் தாலசைத்த
முழக்கன்று கேட்டுப் பொறாமையி னான்முரண் டேரிற்பட்ட
குழக்கன்றிற் காகக் குலக்கன்றை யூர்ந்திட்ட கொற்றவனே 38

நிகளங் களைச்சுளியுங் களியானை நிருப துங்கன்
அகளங்க னம்பொன் னாரையன்னீ ரம்பொன் னாலயத்திற்
றுகளங்க முழ்கத் தமியேன் வருந்திச் சுமந்துபெற்ற
மகளங்க மத்தனை யும்பஞ்ச பாணம் வருத்தியதே 39

ஆரூரன் சன்னிதிபோ லாரூர னாலயம்போ
லாரூரன் பாதத் தழகுபோ—லாரூர்
மருவெடுத்த கஞ்சமலர் வாவிபோல் நெஞ்சே
யொருவிடத்தி லுண்டோ வுரை.

தண்டை யசையச் சதங்கை தகுதியெனக்
கொண்டை யசையமயில் கூத்தாட—எண்டிசைக்கு
முத்தணிந்த மார்பா முருகா எனக்கொரு
தத்துவரும் போதோடி வா.

தூது மதுரை துவரை கடையிடைமுன்
னோதுகின்ற மூன்றெழுத்து மொக்குமே—நீதிச்
செகராச சேகரன்வாழ் சிங்கையெனும் வெற்பில்
நகரா யிழையார் நகை.

சங்குக்குச் சங்கிட்டாள் தாமரைக்குத் தாளிட்டாள்
கொங்கைக்கு முத்துவடங் கோத்திட்டாள்—சங்கு
தமரிட்ட முத்துந் தமரிடா முத்து
மெவரிட்டார் மங்கையருக் கின்று.

வ

வள்ளல் அதியமான் நெடுமானஞ்சி

(ஒரு சிறு நாடகம்)

திரு. சிவ. துப்புசாமிப் பிள்ளை அவர்கள்,
தலைமையாசிரியர், கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி, தஞ்சை

தமிழ் நலம் பேணி, தன்னலங் கருதாப் பொன்மொழிப் புலவர்களால் பாடப்பெற்று, இரவலர், கூத்தர், பாணர் ஆகிய எவருக்கும் இல்லையென்னாது கொடுத்து, வீரமும் வென்றியும் ஒருங்கே திகழுமாறு வாழ்ந்து வந்த, தமிழ் நாட்டுக் குறுநில மன்னர் ஒரு சிலருள், வள்ளல் அதியமான் நெடுமானஞ்சியும் ஒருவனாகும். பொன்னும், புவியும், அணியும் ஆடையும், தேரும் களிறும், உணவும் பிறவும் நல்கி, மாநிலஞ்சுருங்க நீடிசை நிறீஇய கடை வள்ளல்கள், இவனுடனேயே எழுவராவர்.

அஞ்சி, அதிகமான், அதியமான்-நெடுமானஞ்சி, எழினி என்ற பல பெயர்களும் இவனுக்குண்டு: முடியுடைத் தமிழ் மன்னர் மூவருள் ஒருவனாகும் சேரனது மரபிற் றோன்றியவன்: இளமைப் பருவந்தொட்டே, அறிவு, ஆண்மை, இரக்கம், ஈகை, உண்மை, ஊக்கம், எழில்நலம் முதலாய பல வாய்ப்புக்களுடன் கற்றலும் கேட்டலும் மிக்குடையான்: மேலும் அதிகை நகரில் வாழ்ந்த மழவர் என்ற வீரமாபினருக்குத் தலைவனுமாகும்.

இவனது வாழ்க்கை இவ்வாறாக; குதிரைமலை (குத்திராய மலை) என்பது கொங்கு நாட்டின் வடபாலுள்ளது. அதனைச் சார்ந்துள்ளது தகடூர் (தருமபுரி) என்னும் ஊர். அங்கு சேரர் மரபில் வந்த வேந்தன் ஒருவன், ஆண்டு வந்தான். எதிர்பாரா வகையில், பின்தோன்றல்களின்றி அவன் விண்ணாடு சென்றான். குடிகளைக்காக்கும் கொற்றவன் இன்மையால் தகடூர் குழப்பம் கொண்டது: தலைவராதற்குத் தகுதியுடையார் எவரும் அவண் அதுபோது இல்லை: அச்செய்தியை 'அதிகைநகர்-அஞ்சி' அறிந் தான்: தக்க துணைவலியுடன் தகடூர் சென்றான்: அமைதியை

நிறுவினான்: ஆவனபுரிந்து அதன் தலைமையை ஏற்றான்: அது முதல் 'அதிகமானஞ்சி' தகடூரையே தன் இருக்கையாகக் கொண்டு, அதிகையையும் குதிரைமலை நாட்டையும் ஒருங்கே ஆளத் தொடங்கினான்.

தகடூரில், 'எழினி', காட்சிக் கெளியனாகி, கடுஞ்சொல்லும் கையிகந்த தண்டமுமற்று, ஈதலினால் இசைபடவாழ்ந்து, செங் கோலோச்சுவதை யறிந்த நந்தமிழ் மூதாட்டியாகும்-ஔவை யார், அவனைக்காணுமாறு அங்குவந்தார். அதிகனும் ஔவையை அன்புடனே வரவேற்று, பன்னாள் அவருடன் அளவளாவி யிருந்து, பலபரிசுகளுடன் பிரியாவிடைநல்கி அவரைப் பிறநாடு போக்கினான். ஒருநாள் எழினி, தின்றவரை நெடுநாள் வாழ் விக்கும் தீம் நெல்லிக்கனி ஒன்றை, மிகவும் அரிதிற்பெற்று மகிழ்ந்து, தனதுஇல்லம் குறுகியபோது, நீர்வேட்கைமிகுதியும் பெற்றவராக ஔவையார் அவண் இருக்கக்கண்டான். அவர்மீது அவன்கொண்ட பேரன்பினால், எவரும் பெறுதற்கியலாத அந் நெல்லிக்கனியை அவரிடம் தந்து, உடனே அதனை உண்ணுமாறு செய்து, பின்னர் அதனுண்மையைக் கூறினான். அஃதுணர்ந்த ஔவையார் முன்னையினும் அவனிடத்து மிகுந்த அன்பு கொண் டாள்: அவனது உலப்பிலாக் கொடைத்திறனை வியந்தார்: அவன் நல்லிசை யாண்டும் பரவுமாறு, அழகிய தமிழ்ப் பாமாலைகள் பல யாத்தார். அதிகனும் ஔவையைத் தன் தாயினும் பெரி தாகக்கொண்டு, அவரை வழிபட்டு அன்பு பாராட்டினான். இத் தகைய செயற்கரிய செயலாலும், ஔவையார், பொன்முடியார், அரிசில்கிழார், பரணர் போன்ற பெரும்புலவர்களின் நலங்கிளர் புகழுரையாலும் 'அதியமான் நெடுமானஞ்சி'யின் புகழ், தமிழ் நாடு முழுவதும் பரவியது. மேலும், அதிகமான், தன்பாற் பிணக்குற்றிருந்த 'காஞ்சித்தொண்டமான்'எனும் மன்னன்பால், ஔவை மூதாட்டியைத் தூதுபோக்கி, அவனது நட்பினையுங் கொண்டான். இவையாவும் தமிழ் மூவேந்தர்க்கு அதிகனிடம் அழுக்காற்றை வளர்த்தன. 'இருங்கோவேள்மான்', 'எருமை யூரன்', 'திதியன்', 'பொருநன்' என்ற அந்நாளின், குறுநில மன்னர்கள் நால்வரும், அதிகனிடம் பகைமைகொண்டு, மூவேந்

தரது படைத்துணைபெற்றுத் தகடூரை முற்றுகையிட்டனர்: அறிந்தான் அதிகன்: சீற்றம் மிகக்கொண்டான்: நொடிப்பொழுதில் தம் வீரரைத் திரட்டிப் படை கூட்டிப் போர்மேற் சென்ருன். பகைவரது படைகள் கதிரவன் ஒளிமுன்னர்க் காய்ந்தொழியும் பனித்துளியொத்தன. அதிகமான் வெற்றிவாகை சூடினுன். அந்நிலையில், அவனது மனைவி ஓராண் மகவை ஈன்ருள். எனினும் தன் பகைவர்மீது கொண்ட சினம் தணியாதவனுயிருந்ததை யுணர்ந்த ஔவையார், அவன் சினம் தணிவித்து அவனை மகிழ்வுறச் செய்தார்.

பின்னர் பலநாள் செல்ல, அதியமான் நெடுமானஞ்சிக்கும், கடையெழுவள்ளலுள் ஒருவனுன திருக்கோவலூரை யாண்டு வந்த 'மலையமான் திருமுடிக்காரி' என்பவனுக்கும் பகைமை நேர்ந்தது: திருமுடிக்காரியும் சிறந்த வீரனுவன்: எனினும் அதிகமான் வீரருள் வீரனுதலால் அவனது நாட்டை முற்றுகையிட்டுவென்று, அதனைத் தன்நாட்டுடன் சேர்த்துக்கொண்டான். 'காரி', 'பெருஞ்சேரலிரும்பொறை' என்னும் சேரமன்னனிடம் சென்று அவனது துணையைநாடினுன். அவனும் காரிக்குடன்பட்டுத் தனது பெரும்படையுடன் திடீரெனத் தகடூரை முற்றுகையிட்டான். தன்னையொப்பார் யாருமில்லையெனக் கருதி, படைவலியை மிகுக்காது, அரசியலிலேயே உளங்கொண்டிருந்த அதிகன், உளங்கவன்ருன். தன்னுலாயமட்டும் தம்படைஞரை ஊக்கிப் பெருஞ் சமர் புரிந்தான்: என்செய்யினும் ஊழ்வினை வலித்து நின்றமையால், பெரும் வள்ளல், அதியமான்-நெடுமானஞ்சி, இரும்பொறை வாளுக்கு இலக்காகி மண்ணுட்டரசை நீக்கி, விண்ணுடு நோக்கிச் சென்ருன். அதிகன் இறந்தபிறகு, தகடூர்ப் பெருமக்கள் ஒன்றுகூடி அதிகன்மகன் 'போகுட்டெழினி'க்கு முடி சூட்டி, தகடூர்ப் பெருநகர், நல்லரசும் வலிமிகு படையும் பொருந்த, குடிகளைப் புரந்து, ஆண்டு வந்தனர்.

நலம்! நலம்!! நலம்!!!

முதல் இயல்—காட்சி க.

நாடக உறுப்பினர்:—அம்பலவாணர்; கிளிவண்ணன்; பிறைமுடியார்; குடிமக்கள் நால்வர்.

இடம்:—தகடூரில் முருகன் திருமுன்.

காலம்:—மாலைப்பொழுது.

[தகடூர்ப் பெருமக்கள், தங்கள் நாட்டின் குழப்பம் நீங்க, முருகன் திருமுன் கூடியிருந்து ஆம் நெறியறிதல்.]

பிறைமுடியார்:—(தனித்திருந்து) அன்பு நிறைந்த அரும் பொருளே! தண்ணளி ததும்பும் தனிப்பெரும!! உலகெலாம் நிறைந்த எம் உயர்நிலையே!!! நாவார வாழ்த்தியவர்க்குக் கையார அளித்துவந்த எம் தலைவனின் மரபு இவ்வாறுகவோ துன்புறவேண்டும்? என்னே, இக்காலத்தின் கொடுமை! நின் செயலை அளக்க எவரால் ஆகும்?—(பெரு மூச் செறிந்து வாளா, சற்று நிற்றல்)—ஓ! அதோ என் நண்பர் கிளிவண்ணன் வருகின்றார். அவருக்கு இத் தகடூரின் நிலைமை நன்கு தெரியும். அவருடன் இதுபற்றி உசாவி அறிவேன். (கிளிவண்ணன் அண்மையில் வருதல்) வாருங்கள்! கிளிவண்ண, வாருங்கள்!! வாருங்கள்!!! நம் நகர்க் குழப்பம் எவ்வாறுளது? தங்கட்கு எட்டாத செய்தி எதுவும் இராதே.

கிளிவண்ணன்:—என்ன, பிறைமுடியாரே! எனக்குஎட்டியதால் ஆய பயன் என்? இன்று நம்முருகன் திருமுன்னர் கூட்டம் கூடி, நகர வமைதியின் பொருட்டு ஒரு முடிவு செய்வதென நம் தலைவர் கருதியுள்ளார். இதோ காண்மின்! நம் அமைதித் தலைவர் திருவளர் அம்பலவாணனூர் வருகின்றார். நம்மூர்ப் பெருமக்களும் சூழ வருகின்றார்கள். நாமும் அவருடன் கலந்து ஆவன புரிவோமே?

பிறைமுடியார்:—ஆம்! ஆம்!! அதுவும் நன்றே. நானும் அவ்வாறு தான் கேள்வியுற்று இங்கு வந்தேன்.

[அம்பலவாணர் தகடூர் மக்கள் சூழ வர, யாவரும் பணிதல்.]

கிளி வண்ணன்:—(பணிவுடன்) வருக, எம்பெரியோய், வருக! வருக!! அடியேன் வணக்கம். என்னே, நம்நகருக்கு உற்ற தாழ்வு! தங்கள் போன்ற பெரியோர்கள் இருக்கும்போதே இவ்வாறு துன்பங்கள் வந்தால்....அம்மம்ம! பிறகு சொல்லவும், வேண்டுமோ? நம்தலைவர் தகடூர்நாயகன், நாம்எதிர்பாராதவாறு விண்ணாடு புரக்கச்சென்ற இச்சிறு நாள் எல்லைக்குள், நம் தலைவன் பிரிவால் நம் உளம் நைந்து ஊறுபட்டிருக்கும் இது போது, யாரோ ஒரு சில வஞ்சகர்களின் சூழ்ச்சியால், நாடு நிலை கலங்கிக் குழப்பம் பெற்றுத் தடியெடுத்தவன் தண்டற் காரனாக மாறியிருப்பதன் கொடுமையை, என்னென்பது! அழுக் காறும் பேராசைப்பித்தும் தலைக்கேறிய அவர்களது தீச் செயல்கள் நம்மவர்க்கு எத்தகைய துன்பம் தருகின்றன, காண்மின்! ஆதலால், பெரும! தாங்கள் இவ்விடரினை இன்னே களைந்தெறிதற்குரிய முறையினை நன்கு கருதி, எமக்கு வழங் குதல்வேண்டும்.

முதற்குடிமகன்:—(வணக்கத்துடன்)பெருந்தகவோய்!நமது மன்னர்பிரான், மாநிலந்தாங்கியபோது, பசுவும் புலியும் ஒரு துறையில் படிந்து நீரருந்திய அந்நாள்கெட்டு, இன்று அன்ப ராகுநர் யாவர், அல்வழிப்படருபவர் யாவர் என அறியவியலாத வாறு நம்நாடு உளது. சிறந்த அறிவு மிக்கச் சான்றோராகிய தங்களது கண் முன்னேயே இவ்வடாத செயல்கள் நிகழுவதை நோக்கின், நம் நகரை இவ்வாறு தவிக்க ஏற்பாடு செய்த அக் கொடியவர்கள், ஏதோமறைவாக, பிறர துபற்றுக்கோடுபெற்றே இத்தீவினைகளைப் புரிவதாகக் கருதுகின்றேன். இத்தகைய இடுக்கண் வந்தவிடத்துத் தங்களையல்லாத பிறர்பால் எங்கள் உள்ளம் செல்லவில்லை.

இரண்டாவது குடிமகன்:—(தொழுது—வீரத்துடன் நின்று) உயர்குடித் தோன்றலே! எங்களது நிலையைத் தாங்கள் அறியா தது அல்ல. நாட்டின் உரிமையைக் காப்பதன் பொருட்டும், நம் வழித் தோன்றல்களின் நன்மையை நாடியும், மானம்,

ஒப்புரவு, தாளாண்மை, தொண்டு இவற்றையே தம் பணிகளாகக்கொண்ட, இளமையும் உடல் வலிமையும் உளத்திட்பமும் ஒருங்கே பொருந்திய ஓர் ஆயிரத்துக்குமேற்பட்ட இளைஞர்கள், தாங்கள் தலையசைப்பின், இன்னே, இத்தகடூரைத் தவிக்கவிட்ட அத்தன்னலமாக்களைப் படைமுகத்து வாள் முனையில் பார்த்து நிற்க விழைகின்றார்கள். ஆதலால், எம் அண்ணலே, இன்றே தங்களது ஆணையை அவர்கட்கு அளியுங்கள்.

அம்பலவாணர்:—இளைஞர் தலைவ! நீவிர்யாவரும் நம் நாட்டிடைக்கொண்டுள்ள அளவுகடந்த அன்பினைப் பாராட்டுகின்றேம். மேலும், போர்முனையில் நமக்கு மாற்றலராகவுள்ளவர்களை வீழ்த்தவேண்டும் என்ற வீரமொழிகள், தங்களைப்போன்றவருளத்தில் தோன்றுதல் மிகவும் பொருத்தமேயாகும். எனினும் நம் நாடு இதுபோது இருக்கும் நிலையில் அஃது ஆகாத செயலேயொழிய வேறில்லை. நிற்க, நாம் இன்று தொட்டுப் போருக்கு ஆயத்தம் செய்து, படை திரட்டிச் சமர் முறுக்குவதற்குள் ஒரு திங்கள் ஆகிவிடும். எனவே நம் பகைவர்கள் இத் தகடூரைப் பற்றித் தவிடுபொடியாக்கி, நம்மை அடிமைக் குழியிற்றள்ளி நம் செல்வங்கள் அனைத்தையும் கொள்ளைகொண்டு போவார்களென்பது திண்ணம். மேலும், நமக்குள், ஒற்றுமையுணர்ச்சியும் தன்னலமின்மையும் இதுபோது பாழ்பட்டுக் கிடப்பதால், நாம்போர் குறித்துக் கருதாது, வேறு நெறியிற்படரவேண்டும்.

கிளிவண்ணன்:—ஆமாம். போர் என்றால் பொருளல்லவோ செலவழிகின்றது. பொருளழிந்தாலும் நம் நாடு இருக்கும் நிலையில் வெற்றிக்கு உறுதி கூற யாரால் ஆகும்?

பிறைமுடியார்:—நீங்கள் கூறுவதுபோல போர், போர் எனச்சொல்வதால் ஏற்படும் இன்னல்கட்கு எல்லையே இல்லை. நம் கருத்துக்கு மாறுபட்டவர் இருப்பின் அவர்களிடம் இனிமை பயக்கும் முறையில் நடந்து அமைதி நிலவலாம். ஆதலால் தாங்கள் உளங்கொண்ட கருத்தினை அறிவியுங்கள். உடனே ஆவனபுரிந்து, நாட்டின் குழப்பத்தை ஒழிப்போம்.

அம்பலவாணர்:—அன்பர்களே! என் கருத்து, இப்பொழுது நமக்குள் இருக்கும் ஒற்றுமைக் குறைவை நீக்குதற்பொருட்டே

யாகும். நமக்குள் இருக்கும் பிளவை மிகுதிப்படுத்துவதற்கு நம்நாட்டு முடியுடை வேந்தர் மூவரும் முனைந்து நிற்கின்றனர். அவர்கள் மறைவாகக் கலாம் விளைப்பவர்கட்குத் துணையாக இருந்து, அவர்களை ஊக்குகின்றாரென நம் ஒற்றனொருவன் அறிவிக்கின்றான். ஆதலால், நாம் ஒன்றுகூடி எவ்வாறாயினும் நம் நாட்டில் குழப்பம் விளைவிப்பவர்களை அடக்கி, நாட்டில் நன்முறை வழங்குதற்குற்ற முறையையே கொள்ளவேண்டும்.

கிளிவண்ணன்:—ஆம்! தலைவ! அதற்கு ஆம் வழியினையே விரைவிற் கொள்ளுவோம்.

அம்பலவாணர்:—நம்முள் ஒன்றுகூடி கலாம் விளைவிப்பவர்களை யடக்க இயலாது; ஆதலால், நம் நாட்டுடன் தொடர்புள்ளவனும், உறவினனும், பெரும் வள்ளலுமாகிய அதிகைநகரின் தலைவனும் திருமகளும் கலைமகளும் ஒருங்கேபெற்ற, சீர்மிகு 'எழினி' யிடம் சென்று, நங் குறையினை அறிவித்து, நமக்குத் துணைபுரியுமாறு இறைஞ்சுவோமாயின், அவனது வருகையைக் கேட்ட இவர்கள், அவனது வெற்றிமலிந்த ஆண்மைமிகும் படைக்கஞ்சி, இடியொலி கேட்ட நாகமென ஒடுங்குவர் என்பது திண்ணம். மேலும் நம்நாட்டின் குழப்பம் நீக்கப்பெற்றதும் நம்தகடூர் நாயகற்கு பின்வழிஇன்மையால், அவ்'எழினி'யையே மன்னனாகக் கொள்வோமாயின் நம்மனோர் செய்த பேற்றைக் கூற எவரால் ஆகும். இக்கருத்துப்பற்றி நீவிர் என்ன கூறுகின்றீர்களோ, அதுவே எனது கருத்துமாகும்.

பிறைமுடியார்:—அம்பலக்கூத்தரே! உங்கள் கருத்து மிகவும் போற்றத்தக்க தொன்றும். நாம் தலைவனில்லாது வருந்துமிந்நிலையில், 'கண்ணின்றிக் கவலும் குருடனுக்குக் காணும் ஒளியளித்த கடவுளே' போல், தாங்கள் உலகம்வரினும் வழங்கக் குறைபடா வள்ளன்மை மிக்க எழினியைக் குறித்தீர்கள். அத்தகையானை மன்னனாகக் கொள்ள எம் மனம் மிகுந்த மகிழ்ச்சியுடன் களிக்கின்றது.

கிளிவண்ணன்:—தாங்கள் கூறியது முற்றும் பொருத்தமே. எனினும் நம்மிடை வந்து வதிவதற்கு அவர் உடன்படுவாரோவெனும் ஐயம் தான் எனக்கு எழுகின்றது.

அம்பலவாணர்:—நாம் ஒன்றுபட்டு விரும்பின், அவர் வருவதற்குப் பின்னிடார். நாம் அவரிடத்துக் காட்டும் அன்பினுல் யாவும் எளிதிற் பெறலாகும்: அதற்கு ஐயமே வேண்டுவதில்லை. ஆதலால், நாம் அனைவரும் இன்று மாலையே அதிகைக்குச்சென்று, எழினியிடம் நம் நிலையைக்கூறி, விரைவில் நம் நாடு நலம்பெற, எழினியையே தலைவனுகக் கொள்வோம்; எழுந்திருங்கள்; செல்வோம் விரைவில். நாம் கொண்ட இவ்வினை முட்டின்றி முடியுமாறு, முருகவேளை நாம் அனைவரும் போற்றி வணங்குவோமாக. (யாவரும் முருகனைப் பாடி வழிபடுதல்).

எதிரி லாத பத்தி தனைமேவி
இனிய தாள்நி னைப்பை இருபோதும்
இதய வாரி திக்குள் உறவாகி
எனது ளேசி றக்க அருள்வாயே
கதிர காம வெற்பில் உறைவோனே
கனக மேரு ஒத்த புயவீரா
மதுர வாணி உற்ற கழலோனே
வழுதி கூன்நி மிர்த்த பெருமாளே.

இயல். க—காட்சி க. முடிவு.

இயல் ௪—காட்சி ௨.

உறுப்பினர்:—பரணர், பொன்முடியார், அதிகைமுதல்வன், அமைச்சன், எழினி, காவலன்; அம்பலவாணர், கிளிவண்ணன், நகர்முதல்வன்.

இடம்,—அதிகையில் எழினியின் கோயில்.

பொழுது:—காலைப்பொழுது.

[தகடூர் மக்கள் அதிகை நகர்த்தலைவன் அஞ்சியைத் தங்கட்குத் துணையாமாறு வேண்டுதல்.]

பரணர்:—உலகம் சுருங்குமாறு புகழ்பரப்பும் உயர்ந்தோய்! வரையாது கொடுக்கும் வள்ளலே! யானை, தனது கொம்புகளுக்கிடையே, தான் உண்ணுதற்குரிய கவளத்தை வைத்துக்கொண்டு பொழுது போக்கினும், பின்னர் தவறாது அக்கவளத்தை அஃது உண்டு விடுவதுபோல நின்னையடைந்தபுலவர், பாணர், இரவலர் எவரும், ‘பரிசிலும் நம்கையகத்தே உளது, நெஞ்சே! நீ வருந்த வேண்டாம். அவன் தாள் நீடுவாழ்க’ என நினைந்து நீ காலம் நீட்டித்தாலும், உன்பால் உறுதிகொண்டு, நாளும் பழுமரம் நாடிய பறவைபோல நின்னை நாடிவந்த வண்ணமாகவே இருக்கின்றனர். ஆதலால் கருந்தனமின்றி கவலையுற்றுக் கலங்குவார்க்குக் களைகணுயுள்ள நீ, நீடு வாழ்வாயாக!

பொன்முடியார்:—மலர்ந்த தும்பையணிந்த பரந்த மார்பையுடைய வீரர் தலைவ! விரிந்த வெண்காந்தள் மலர் இலை தழைத்த குழவியுடனே மணக்கும் மலைச்சாரலிலுள்ள சினம் மிகும் புலி சீறின், அதனை எதிர்க்க வல்ல மான்கூட்டங்களும் உண்டோ? உலகம் உவப்ப பலர்புகழ் செஞ்ஞாயிறு தோன்ற முற்படின் வானத்தின் எந்தத் திசையிலாவது செறிந்த இருள் நிலைக்க இயலுமா? அவைபோல பெரும! நீ போர்க்களத்திற் புகின், நின்முன்னின்று ஆர்த்து எழும் வலிமையுடைய வீரரும் இந்நானிலத்தும் உண்டோ?

அதிகை முதல்வர்:—நன்மணம் உற்ற பொன்மலர் போல கல்வியிற் சிறந்த கட்டழக! தந்தையர்க்கு, தமது இளமை மிக்க சிறுபிள்ளைகளின் மழலை ததும்பும் மொழிகள் யாழின் ஓசை போல இசையினால் இன்பமும் செய்யாது, உரிய காலத்தோடும் சேர்ந்தும் இராது, பொருளும் அறிய வாரா நிலையினவாயினும், அச்சொற்களே அவர்கட்கு மிகுந்த இன்பத்தைத் தருகின்றன. அஃதொப்ப, உடல் நலம் பொருள்நலம், படைநலம், ஆட்சிநலம் யாவும் பெற்றிருந்தும் கல்விநலம் கனிந்த பெரியாரின் அமுத மொழியினை உண்டாலன்றி நினது நெஞ்சம் அமைதியுறாத தாயிருக்கின்றது, என்பதை நன் குணர்ந்த நின் குடி மக்கள் யாவரும் கல்வித்துறையிற் படிந்து கற்றல் கேட்டல் இவற்றுள் மனங்கொண்டு, அறிவு விளக்கம் பெறுகின்றனர்.

அமைச்சன்:— ஆட்சிநலம் பெருக, கோல்கோடாது நன் முறை செலுத்தும் மாண்பு மிக்க மன்ன! நம் நாட்டின் குடி மக்கள் யாவரும் பசி, பிணி, பகையின்றிக் கல்வியும் செல்வமும் மிக்குடையராய், இன்புற்று வாழ்கின்றனர். மேலும், பரணர் பெருமான், பொன்முடியார், நம் நாட்டு முதல்வர் ஆகிய இம் மூவரும் மாட்சிமிக்க தங்கள் வென்றியும் புகழும் விளங்கக் கூறி னர். தங்களது மன்னுயிர் ஓம்புந்திறன், நம்நாட்டு முடியுடை வேந்தர் மூவருக்கும் பொறுமையை விளைவித்துள்ளதெனில் எம்மனோர் தங்களது பெருமையைக் கூறஇயலுமோ! திருவருள், எல்லாம் வல்ல, தங்களது ஆட்சிநலன், நீடு நிலவ, அருள்புரி வதாக.

எழினி:— அறிவுசால், அன்புமிக்க பெருந்தகையீர்! நீங்கள் அனைவரும், எனது புகழை, மிகுதிப்படவே கூறினீர்கள். நமது வழிபடு முதல்வனும் முருகனது திருவருள், நீவிர் கருதிய அனைத்தும் எளியனுக்கு எளிதில் வந்துறத் துணைபுரியுமாக. உங் களது உறுதுணையைப்பற்றி, அவனது அருள்வழிநின்று எனது கடைமையை யான் இனிதுபுரிய மறவேன் என்பது திண்ணம்.

காவலன்:—(வணங்கி நின்று) எளியாரைப் புரந்து வலி யாரை வாட்டி, குடிநலம் ஓம்பும் கொற்றவ, வாழீஇ! தங்களது கழலடி எனது முடியை அழகு செய்யுமாக. பெரும! நமது

தலைவாயிலிலே, தகடூர்ப் பெருமக்கள் ஒரு சிலர் கூடி நின்று தங்களது திருவருட்காட்சியை விரும்பி வேண்டுகின்றனர்.

எழினி:—நல்லது, காவல! அவர்களை விரைவில் இவண் அழைத்து வருக.

காவலன்:—தங்கள் திருவாணைப்படி (வணங்கிச் செல்லுகிறான். அம்பலவாணர், தகடூர்ப் பெருமக்களுடன் உள்நுழைந்து வணங்குதல்.)

எழினி:—வருக, தகடூர்ப் பெருமக்களே! வாருங்கள், வாருங்கள்! இவண் அமருங்கள் (தகடூரோர் இடத்தமர்தல்) நீவிர் யாவரும் இவண் எழுந்த நிகழ்ச்சி யாதோ? உங்களது தலைவரும் பிறரும் நலந்தானே?

அம்பலவாணர்:—கொடியவரை வாட்டி, அன்பரைப் புரக்கும் கொன்றைமலர் புனைவோனின் அருள்நிலைப் பட்டகோவே! எங்களது வணக்கம் உங்கட்கு உரியதாகுக. எங்கள் தலைவன் 'தகடூர் நாயகன்' தாயை இழந்த சேய்போல யாங்கள் இவ்வுலகிலிருந்து நெடுந்துயரெய்துமாறு விட்டு, இறைவன் திருவடியை நாடிய செய்தி தாங்கள் அறிந்திருக்கலாகுமே?

(தொடரும்.)

மதிப்புரை

அறிவுக்கொடி:—என்னும் மாதத்தாள் 15—11—36 தேதி முதல் கும்பகோணத்திலிருந்து வெளிவருகின்றது. சமூக சீர்திருத்தத்தைக் குறிக்கோளாகக் கொண்டு செவ்விய தமிழில் எளிய நடையில் தனது பொருளைப் பலரும் உணருமாறு அறிவு புகட்டுவது. இதன் ஆண்டுவரி உள்நாட்டிற்கு ரூ. 1—0—0 வெளிநாட்டிற்கு ரூ. 1—8—0.

சாதி சமயக்கோட்பாடுகளால் சமூகம் சீர் குலைந்திருப்பது மறுக்கவொண்ணாத செய்தி. சீர் திருத்தம் பேசுவோர் புதுமை என்றதால் ஒரு கொள்கையை ஏற்பதும் பழமை என்றதால்

அக்கொள்கையை மறுப்பதும் நேரிதன்று. மக்களின் நல்வாழ்விற்கும், முன்னேற்றத்திற்கும் துணை செய்வனவா என நடுநின்று ஆய்ந்து முடிபு காணவேண்டும். இத்தகைய ஆராய்ச்சியில் தலைப்படும் நன்மக்கள் அறிவின் பேரெல்லையைத் தாம் எய்தியதாக நினையாது அறியுந்தொறும் அறியாமை காண்பதென்னும் உண்மையை மறக்கவொண்ணாது. வாழ்க்கையின் குறிக்கோளுக்கு ஏற்றவாறு மக்களின் கடமையும் ஒழுகலாறும் மேற்கொள்ளப்படுமென்பதை அறிஞர்கள் மறுக்க மாட்டார். மெய்ப்பொருளைக் காணவும், கண்டமெய்ப்பொருளை உலகறியச் செய்யவும், தலைப்பட்டிருக்கும் 'அறிவுக்கொடி'யைத் தமிழுலகம் விருப்புடன் போற்றுமாக.

எண்ணெயும் தண்ணீரும் என்ற கட்டுரையின் பிழை திருத்தம்

(துணர் 12, மலர் 8-ல் பார்க்க.)

பக்.	வரி.	பிழை.	திருத்தம்.
287	4	இரைக்க	இறைக்க
,,	கடைசிவரி	குளிர்ச்சியே	ஈர்மை குளிர்ச்சியே
288	5	"பாட்டில் மீனெய்	பாட்டில் "மீனெய்
,,	15	ஐயரவர்களும்,	ஐயரவர்களும்.
,,	கடைசிவரி	பரிபாடலின்	பரிபாடலில்
289	4	சொதியான்	சோதியான்
290	1	'நெய்	'நெய்'
,,	கடைசிவரி	சூரியநாரயண	சூரியநாராயண
291	8—9	வேறுபட்டது......... ....பற்றியதாகலின்,	வேறுபட்டது, ...பற்றியதாகலின்.
,,	17	மண்ணெய்	மண்ணெண்ணெய்
292	13	ஊரிய நீர்	ஊறிய நீர்"
,,	14	குறட்பகுதில்	குறட்பகுதியில்
,,	29	நகர்நீங்க	நகர்நீங்கு
293	13	கொள்ளிரே	கொள்ளீரே

உ

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

கல்லூரிக்கு அன்பர்கள் உதவிய "கார்த்திகை" நன்கொடை

திங்கள் நன்கோடை		ரூ. அ. ப.
திரு. சித்த வைத்திய சரபம் Dr. ஆ. சோதிபாண்டியன்	அவர்கள்	5 0 0
,, K. நடராசன் B.A., B.L., (Advocate.)	,,	5 0 0
,, T. S. சபாபதி பிள்ளை B.A., (Retired. Dt. Registrar.)	,,	1 0 0
,, R. விசுவநாதன்	,,	0 4 0
ஆண்டு நன்கோடை		
,, V. நாடிமுத்துப் பிள்ளை	,,	10—0—0
,, R. பொன்னுசாமி பிள்ளை (தமிழ்வித்துவான், உரத்தநாடு)	,,	4—0—0
,, இராவ்சாகிபு I. குமாரசாமிபிள்ளை B.A.,	,,	1—0—0
,, T. S. சுப்பிரமணிய பிள்ளை (Vice-Chairman.)	,,	2—0—0
,, டாக்டர் L. சொக்கலிங்கம் பிள்ளை L.M.P.	,,	1—0—0
,, கு. பேச்சிமுத்து பிள்ளை (Merchant.)	,,	1—0—0
,, S. சோமசுந்தர முதலியார் (Clerk, Collectors Office.)	,,	1—0—0

திரு. R. அருணசலம் பிள்ளை அவர்கள் 1—0—0
(Municipal Water Works.)

,, ராவ்சாகிபு N. S. ராஜகோபால்நாயுடுகாரு ,, 1—0—0

,, V. அழகிரிசாமிநாயுடுகாரு B.A., B.L., ,, 1—0—0
(Advocate)

,, நா. கந்தசாமிபிள்ளை ,, 1—0—0

,, N. L. ஐயர் ,, 1—0—0
(Merchant)

,, K. S. ராமசாமிசெட்டியார் B.A., B.L., ,, 1—0—0
(Advocate)

,, T. A. வாசுதேவ பிள்ளை B.A., ,, 1 0 0
(Retired Dt. Registrar.)

,, K. மாணிக்கம் பிள்ளை ,, 1—0—0
(Head Clerk, D. B. A. E. Office.)

,, J. G. கோபில் பிள்ளை B.A., L.T., ,, 1—0—0
(Head-Master, S. P. G. High School.)

,, M. வேங்கடாசலம் பிள்ளை B.A., B.L., ,, 1—0—0
(Advocate)

,, N. L. சின்னகிருட்டின நாயுடு ,, 1—0—0
(மளிகை)

,, A. பால் B.A., L.T., ,, 1—0—0

,, சந்திரகாசநாடார் ,, 1—0—0
(அரிசி வியாபாரம்)

,, A. வீரப்பிள்ளை ,, 1—0—0
(காய் கறிக்கடை)

,, A. சிங்காரவேல் உடையார் ,, 1—0—0
(அரிசி வியாபாரம்)

,, வேங்கடசாமி நாயுடு ,, 1—0—0
(எண்ணெய் வியாபாரம்)

மருத்துவசாலைக்குதவிய 'கார்த்திகை' நன்கொடை

திரு. க. தியாகராச பிள்ளை அவர்கள் B.A., 120—0—0
(Electrical Engineer) பம்பாய்.